REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஓகஸ்ட் 1 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
1932 - 2022
වරුෂ. 90 இல. 179 | Monday 01, August, 2022 | 12 பக்கங்கள் | 40/-

**பொதுநலவாய விளையாட்டு;**

## பளுதூக்கல் போட்டியில் இலங்கைக்கு பதக்கம்



இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் நடைபெறும் 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை 04

## சர்வ கட்சி அரசாங்கமே எமது இறுதி நிலைப்பாடு

**சகல கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



சர்வ கட்சி அரசாங்கம் உருவாக்குவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். 04

**விற்கவோ ஹோட்டலாக மாற்றவோ எவ்வித தீர்மானமுமில்லை;**

## லேக் ஹவுஸ் நிறுவனம் தொடர்பில் சில ஊடகங்கள் விஷம பிரசாரம்

**ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மறுப்பு**

*(ஷம்ஸ் பாஹிம்)*





லேக் ஹவுஸ் நிறுவனத்தை ஹோட்டலாக மாற்றவோ விற்பனை செய்யவோ அரசாங்கம் 04

## இன்று முதல் QR முறைமையில் மட்டுமே எரிபொருள்

**அமைச்சர் கஞ்சன நேற்று தெரிவிப்பு**



தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திர முறைமை இன்று (01) முதல் நாடு முழுவதும் அமுலாகும் வகையில் செயற்படுத்தப்படவுள்ளது.

எனினும், நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தங்களுக்கான ஒதுக்கத்தை பெற்றுக் கொள்வதற்காக ஒரு வார காலம் உள்ளமையினால் நெரிசல் ஏற்படாத வகையில் செயற்படுமாறு வலுசக்தி அமைச்சர் 04

**சர்வ கட்சி அரசாங்கம் அமைக்க முயற்சிப்போம் அல்லது**

# சகல கட்சிகளும் இணைந்து பாராளுமன்ற அரசாங்கம்



**கட்சித்தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு**

**சமூக, பொருளாதார, அரசியல் சவால்களை முறியடித்து புதிய பாதையில் பயணிக்க ஜனாதிபதி மீண்டும் அழைப்பு விடுப்பு**

சர்வகட்சி அரசாங்கம் அல்லது அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தை அரசாங்கமாக ஸ்தாபித்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து, 04



கண்டி வரலாற்று சிறப்புமிக்க தலதா மாளிகைக்கு கடந்த சனிக்கிழமையன்று விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமய வழிபாடுகளில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.



**தமிழர் பிரச்சினையை தீர்க்க ஜனாதிபதியுடன் பேச தயார்!**

கிளிநொச்சியில் சிறீதரன் MP 03

**அயல் நாட்டுக்கு முன்னுரிமை கொள்கை;**

## இலங்கை மக்களுக்கு உதவும் கடப்பாடு இந்தியாவுக்கு

**ஜனாதிபதி ரணிலுக்கு இந்திய ஜனாதிபதி வாழ்த்து**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சவால்களிலிருந்து மீண்டுவர இலங்கை மக்களுக்கு உதவவேண்டிய கடப்பாடு 04

## ரஞ்சனின் விடுதலைக்கு காத்திருக்கும் சஜித்

**சிறை சென்று பார்த்தபின் கருத்து**



ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுவிக்கப்படுவார் என தான் எதிர்பார்ப்பதாகவும் அந்நாளுக்காக காத்திருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் 04

## ஜனாதிபதி மாளிகையின் சொத்துக்களுக்கு சேதம்

**நுவரெலியாவில் ஐவர் அதிரடி கைது**



கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதியின் மாளிகைக்குள் நுழைந்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் பிடியாணை பெற்ற சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நுவரெலியா, களுகெலே பொனஸ்டா பகுதியில் வைத்து (30) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். 04

## எரிபொருள் விலைகள் இன்று குறைவடையலாம்?

**எரிசக்தி அமைச்சு தகவல்**



எரிபொருள் விலை மறுசீரமைப்பு இன்று (1) இடம்பெறலாம் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். கடைசியாக ஜூலை 17 ஆம் திகதி எரிபொருள் 04

## 05ஆம் திகதி வரை வாரத்தில் 03 நாட்களே பாடசாலை

**கல்வியமைச்சின் தீர்மானம் அறிவிப்பு**



ஆகஸ்ட் முதலாம் திகதி (இன்று) முதல் 5 ஆம் திகதி வரையான வாரத்தில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளை 03 நாட்களுக்கு திறக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமைவாக திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் 04

## சர்வ கட்சி ஆட்சியை அமைக்க அரசு விரும்பினால் TNA ஆதரவு

**வவுனியாவில் சுமந்திரன் MP தெரிவிப்பு**



*வவுனியா விசேட நிருபர்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு சர்வ கட்சி ஆட்சியை அமைக்க உண்மையாக முன் வந்தால் அதனை நாம் வரவேற்போம். பொருளாதார சிக்கலில் இருந்து விடுபட அது தான் ஒரே வழி. ஆனால் அது உண்மை தன்மையான 04

**எமது கட்சி ஒத்துழைப்பு உங்களுக்கு வேண்டுமா?**

## அரசியல் கைதிகள் விடுதலையில் தமிழ் கைதிகளுக்கு முதலிடம்

**– காலிமுக போராட்டக்காரர் கூட்டத்தில் மனோ**



காலிமுக போராட்டக்காரர்கள் என்ற முறையில் சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளீர்கள். ஆட்கடத்தல், முறைதவறிய கைது, அவசரகால சட்டம், பயங்கரவாத தடை சட்டம், அரசியல் கைதிகள் விடுதலை, மனித உரிமை பேணல், மக்களுக்கு நிவாரணம் ஆகியவற்றை நாம் ஏற்கிறோம். 04



ஜூலை மாதம் மட்டும்

**20 இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்** 03



இன்னொரு கொவிட் அலையா?

**எதிர்கொள்ளும் வல்லமை எம்மிடம் கிடையாது** 03



**கொவிட் தொற்றாளர் தொகை 12% அதிகரிப்பு**

உயிரிழப்போர் தொகையும் கூடியது 03

## 1,164 சுற்றிவளைப்பில் 1086 நபர்கள் கைது

**எரிபொருள் மோசடியில் மேலும் பலர்**



நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட 1,164 எரிபொருள் சோதனை சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, 1,086 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். மேலும், குறித்த எரிபொருள் சோதனை நடவடிக்கையில், 37,296 லீற்றர் பெற்றோல், 119,457 லீற்றர் 04

## பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு செல்லவும்

**JVP லால்காந்த அரசிடம் கோரிக்கை**



தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் சமூக நெருக்கடி ஆகிய இரண்டையும் தீர்ப்பதற்கு பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு செல்வதே சரியான தீர்வாக இருக்கும். தற்போதைய அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சமூகத்திற்கு வாய்ப்பளிப்பதே ஒரே வழி என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல்துறை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார். 04

## மின் கட்டணங்கள் இனி மின்னஞ்சலில்

**இணையத்தளத்தில் பதிய CEB கோரல்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பாவனையாளர்கள் தமக்கான மாதாந்த மின் கட்டணப் பட்டியலை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை மேற்கொண்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் மூலம் அதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் 04

**சிற்றன்னையின் கொடுமை தாங்காது**

## 200 கி.மீ சைக்கிளில் பயணித்த சிறுவன்

**கெபெதிகொல்லாவையில் மீட்பு**



சிற்றன்னையின் கொடுமைகள் மற்றும் துஷ்பிரயோகம் தாங்க முடியாத 14 வயது சிறுவன் ஒருவன் நெடுங்கேணியிலிருந்து வாழைச்சேனை வரை 200 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணிக்கையில் கெபெத்திகொல்லாவயில் வைத்து பொலிஸாரினால் பாதுகாப்பாக 04

## கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிப் பிரயோகம்

**விவேகானந்தா வீதியில் ஒருவர் பலி**



கொழும்பு கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொட்டாஞ்சேனை விவேகானந்தா வீதியில் வசிக்கும் 51 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பிரிவு 04





தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமயக்கிரியைகளில் ஈடுபட்டதோடு மகா சங்கத்தினரினதும் ஆசிகளை பெற்றார். அதனை தொடர்ந்து மல்வத்து மகா விகாரை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விலும் அவர் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, திலும் அமுனுகம, குணதிலக ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர், ஜனாதிபதி ஆலோசகர் ருவன் விஜயவர்தன, ஐ.தே.க பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க, ஐக்கிய லக் வனிதா. முன்னணியின் தலைவி சாந்தினி கோன்கஹகே, கம்பளை நகரபிதா சமந்த அனுரகுமார, ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் உள்ளிட்ட கண்டி மாவட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக பொது போக்குவரத்தினை மக்கள் கூடுதலாக பயன்படுத்தி வரும் நிலையில்

மிகவும் நெரிசலான பயணங்களின் போது கொள்ளையர்கள் கைவரிசையை காட்டுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தனியார் பேருந்து சேவைகள், அரச பேருந்துகள் மற்றும் தொடருந்துகள் என்பவற்றை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு அவற்றில் மக்களின் நெரிசலும் அதிகரித்துள்ளது.

இதன்போது மக்களின் பயணப் பைகள் மற்றும் ஏனைய பெறுமதிமிக்க பொருட்களை கொள்ளையிடுவதற்காக சிலர் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கின்றனர்.எனவே, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துபவர்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எரிபொருள் நெருக்கடியுடன் பலரும் சொந்த வாகனங்களுக்குப் பதிலாக ரயில் மற்றும் பஸ்களில் பயணித்து வருகின்றனர். இதனுடன் மோசடிகளும் அதிகரித்துள்ளதோடு இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (பா)



பிரபல நடிகர் ஜெக்சன் எந்தனிக்கு ஆசி வேண்டி கங்காரமை விகாரையில் நேற்று விசேட போதி பூஜை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சரின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவன தலைவருமான அனுச பெல்பிட்ட, அரச தகவல் திணைக்கள தலைவர் மொஹான் சமரநாயக்க, புரவலர் ஹாசிம் உமர் ஆகியோரை படத்தில் காணலாம். படம்: ரஞ்சித் அசங்க



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் பாரியார் சானாஸ் ரவூப் ஹக்கீம் அண்மையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதுநிலை வர்த்தக முகாமைத்துவம் (எம்.பி.ஏ) பட்டப்படிப்பினை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார். அவர் பட்டமளிப்பின் பின்னர் தனது கணவர் ரவூப் ஹக்கீமுடன் எடுத்துக்கொண்ட படம்.

படம்: அஷ்ரப் ஏ சமத்

# திருச்சியில் தமிழ் ஹைக்கூ உலக மாநாடு - 2022

தமிழ் ஹைக்கூ உலக மாநாடு2022 திருச்சி தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் கடந்த ஜூலை (17) சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாட்டை தூண்டில் இனிய நந்தவனம் தமிழ் கவிதையாளர்கள் இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தின.

இம்மாநாட்டை கல்வியாளர் சௌமா ராஜரத்தினம் தொடங்கி வைத்ததோடு ஒன்பது அமர்வுகளாக இது நடைபெற்றன. இதில், தமிழகம், இந்தியாவின் பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் 150க்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிஞர்கள், ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

ஹைக்கூ வாசிப்பரங்கம், கருத்தரங்கம், பகிர்வரங்கம், கலந்துரையாடல், கவிக்கோ நினைவு ஹைக்கூ விருது வழங்குதல், ஹைக்கூ நூல்கள் வெளியீடு ஆகியன நடைபெற்றன.

இம்மாநாட்டில் திரைப்பட இயக்குநரும் கவிஞருமான என்.லிங்குசாமி, பிருந்தாசாரதி, ஓவியக்கவிஞர் அமுதபாரதி, ஆரூர் தமிழ்நாடன், தங்கம்மூர்த்தி, மு.முருகேஷ், நந்தவனம் சந்திரசேகரன், அமரன், சந்திரா மனோகரன், வதிலை பிரபா, பல்லவி குமார், நீலநிலா சென்பகராஜன்,கவிநிலா மோகன், முனைவர் ம.ரமேஷ், தனலெட்சுமி பாஸ்கரன், பா.தென்றல் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.




மாநாட்டு நிறையுரையாக கவிஞர் என்.லிங்குசாமி பேசுகையில், "ஹைக்கூ கவிதை எழுதுபவனின் மனநிலையானது உலகில் இருக்கும் எல்லா மனிதர்களின் மனநிலையிலிருந்தும் வேறுபட்டிருக்கும். அவர்கள் இந்த உலகத்தைப் பார்க்கின்ற பார்வையும் மற்றவர்கள் மீது காட்டுகின்ற அன்பும் மகிழ்ச்சியும் வித்தியாசமாக இருக்கும்.

சென்னைக்குப் போனால் பிழைத்துக் கொள்ளலாம் என்ற உந்துதலை எனக்குத் தந்தது மூன்று வரி ஹைக்கூ கவிதைதான். என்னை இந்த உயரத்திற்கு உயர்த்தியதும் எனது வெற்றி தோல்வியில் மனதைச் சமநிலையில் வைத்துக்கொள்வதும் இந்த ஹைக்கூ கவிதைகள்.

ஹைக்கூ கவிதை எழுத மெனக்கெட கூடாது. அது இயல்பாக அமைய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மாநாட்டில் 'தூண்டில்' ஹைக்கூ சிறப்பு மலர், மு.முருகேஷ் எழுதிய 'ஞானியின் பச்சைக்கிளி', தங்கம்மூர்த்தியின் 'மழையின் கையெழுத்து' உள்ளிட்ட பல ஹைக்கூ கவிதை நூல்கள் இதன்போது வெளியிடப்பட்டன.

தமிழக அரசு ஆண்டுதோறும் வழங்கும் இலக்கிய விருதுகளில் கவிக்கோ அப்துல் ரகுமான் பெயரால் ஹைக்கூ கவிஞர்களுக்கும் ஒரு விருதினை வழங்கிட வேண்டுமென்கிற தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

## மலைச்சாரல்

### தந்தையின் தாக்குதலில் மகன் பலி தந்தை கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

தந்தை மகனுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் மகன் பலியான சம்பவம் ஒன்று நேற்று (31) இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பலாங்கொடை ஓபநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் 31 வயதான மகன் பலியாகியுள்ளார்.

மகனின் மரணம் தொடர்பில் 57 வயதான தந்தை சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஓப்பநாயக்க பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பகுதிநேர தொழில் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பகுதி நேர கற்கை நெறிகளுக்காக புதிய பயிலுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழில் பயிற்சி கற்கை நெறிகளாக அடிப்படை மோட்டார் சைக்கிள் பராமரிப்பு, கையடக்க தொலைபேசி பழுது பார்த்தல், அடிப்படை ஹோட்டல் தொழிற்பாடு ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதேபோன்று மொழி பயிற்சி கற்கை நெறிகளாக ஜப்பான் மொழி, கொரியன் மொழி, அடிப்படை ஆங்கிலம், இரண்டாம் மொழி சிங்களம் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள் வார இறுதி நாட்களில் நடைபெறும். இக்கற்கை நெறிகளை தொடர வயது எல்லை கிடையாது. 100 வீதம் செயன்முறை ரீதியான கல்வியே இங்கு வழங்கப்படும். அத்துடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் பயிற்சிநெறி தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு வதிவிட முகாமையாளர், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் 051 2223492, 051 2222762 போன்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு விவசாயம் மேற்கொள்ள உதவி

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான சாமிமலை பிரதேசத்தில் உள்ள கவரவிலை தோட்டத்தில் விவசாயம் மேற்கொள்ள ஐ.எம்.எச்.ஓ. என்ற தொண்டு நிறுவன மூலம் பெருந்தொகையான விதைகள் வழங்கும் வைபவம் தோட்டத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தொண்டு நிறுவன இயக்குநர் மற்றும் கவரவிலை தோட்ட முகாமையாளர் உதவி முகாமையாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கவரவிலை தோட்டத்தில் உள்ள 395 குடும்பங்களுக்கு இவ்வாறு வீட்டு தோட்டத்தில் பயிரிடப்படும் பல்வேறு விதமான விதைகள் வழங்கப்பட்டன. எதிர் காலத்தில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் விவசாயம் மேற்கொள்ள வேண்டும் என இவர்களுக்கு பணிப்புரையும் வழங்கப்பட்டது.

## சுற்றாடலுக்கும் மக்களுக்கும் பாதிப்பின்றி மணல் அகழ அனுமதி

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள களுகங்கையில் மணல் அகழும் அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் வழங்க புவிச்சரிதவியல் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில் மணல் அகழ்வதால் களுகங்கையின் சுத்தமான நீரை அருந்தும் பொது மக்கள் குறிப்பாக களுத்துறைப் பிரதேச மக்கள் குடிநீரை பெறுவதில் எதிர்நோக்கிய நிலைமைகளை கருத்திற்கொண்டு இத்தீர்மா னம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில் களுகங்கையில் மணல் அகழ்வதை நீண்ட காலமாகத் தமது ஜீவனோபாயமாக நடத்தி வந்த இப்பிரதேசத்தில் மணல் அகழும் 246 அனுமதிப்பத்திரம் பெறுவோரின் வேண்டுகோளையடுத்து இரத்தினபுரி மாவட்டச் செயலகம் மற்றும் பொலிசாரின் கண்காணிப்பில் இதனை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. சுற்றாடலுக்குப் பாதகம் ஏற்படாத விதத்தில் இதற்கான அனுமதியை வழங்கியதாக புவிச்சரிதவியல் திணைக்கள இரத்தினபுரி மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

## எரிபொருள் நிலையத்தில் ஊழியர்களை பயமுறுத்தி வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட நபர் கைது

**ஹாலி எல விசேட நிருபர்**

நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பதுளை ஹிந்தகொட பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் எரிபொருளை பெற வந்த நபர் பலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதை அடுத்து ஒருவர் இரவில் துப்பாக்கியுடன் வந்து வானத்தில் சுட்டு எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களை பயமுறுத்தியுள்ளார். சம்பவம் இடம் பெற்று சில மணித்தியாலங்களில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதோடு, துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட .9mm ரக கைத்துப்பாக்கியும் பதுளை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் மீட்கப்பட்டது.

பதுளைப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.சுஜித் வெதமுல்லவின் அறிவுறுத்தலின் பேரில் பதுளை தலைமையக பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கிவ்.ஆர்.கோட் முறைக்கமைய ஹட்டனில் எரிபொருள் விநியோகம்

**ஹட்டன் விசேட நிருபர்**

ஹட்டன் பகுதியில் கிவ்.ஆர்.கோட் முறைக்கமைய நேற்று (31) எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. அரசாங்கம் அனைவருக்கும் எரிபொருள் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் பதுக்கல் கள்ளச் சந்தை, வரிசை உள்ளிட்ட விடயங்களை தவிர்க்கும் முகமாக கிவ்.ஆர்.கோட் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்நிலையில் நேற்று முதலே ஹட்டன் பகுதியில் கிவ்.ஆர்.கோட் முறைக்கமைய எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இதற்கமைய மோட்டார் சைக்கிளுக்கு நான்கு லீற்றர்களும், முச்சக்கரவண்டிக்கு ஐந்து லீற்றர்களும், கார் மற்றும் வேன்களுக்கு 20 லீற்றர் பெற்றோலும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 1 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
01 முதல் 04 வரை
சுபஹ் - 04.44
லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆடி 16
ராகுகாலம் : பகல் : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சதுர்த்தி



பொருளாதார நெருக்கடியுடன்

## விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களின் தொகை 30% ஆல் அதிகரிப்பு

அதிர்ச்சித் தகவலை வெளியிட்டது இந்திய செய்திச் சேவை

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில், பெண்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும், வாழ்வாதாரத்திற்காக அவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 22 மில்லியன் மக்கள் பாரிய கஷ்டங்களையும் வறுமையையும் எதிர்கொள்வதாக இந்திய செய்தி நிறுவனமான ANI சுட்டிக்காட்டியுள்ளது.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அன்றாடப்

04

## சந்தேகத்திற்கிடமான 1000 பேரின் கைரேகைகள் கண்டுபிடிப்பு



ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றில் இருந்து 1000க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான கைரேகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை , ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றிற்குள் கடந்த ஜூலை மாதம் 09ஆம் திகதி பலாத்காரமாக நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியது குறித்தும் பிரதமர் அலுவலகத்திற்குள் கடந்த ஜூலை 13ஆம் திகதி நுழைந்து சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்படுத்தியது தொடர்பான

04

## ரூ.16 கோடி பெறுமதியான இரத்தினக்கற்கள் கொள்ளை

குருந்துவத்தையில் CIDயினால் இருவர் கைது



கொழும்பு பாலத்துறை பிரதேசத்தில் 15 கோடியே எண்பத்தேழு இலட்சத்து 35,000 பெறுமதியான இரத்தினக் கற்களை கொள்ளையிட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குருந்துவத்தை அலெக்ஸான்ட்ரா பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் கடந்த 8ஆம் திகதி இரத்தினக் கற்கள் அடங்கிய பெட்டகம் ஒன்று கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதன்படி, சுமார் 16 இரத்தினக் கற்கள் இவ்வாறு கொள்ளையிட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்காக பயன்படுத்தப்பட்ட வான் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒருவரை கொலை செய்துவிட்டு

## தப்பிச் செல்ல முயன்ற தம்பதி அதிரடி கைது

ஒருவரைக் கொலை செய்துவிட்டு துபாய்க்கு தப்பிச் செல்ல முயற்சித்த தம்பதியினரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் (30) கைது செய்துள்ளனர்.

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவில் ஆண் ஒருவரை கொலை செய்தாகக் கூறப்படும் மேற்படி தம்பதியினர் துபாய்க்கு தப்பிச் செல்ல தயாராகி வருவதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு கல்கிஸ்ஸ தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய, கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் இந்த தம்பதிக்கு எதிராக தற்காலிக விமானத்தடை விதித்து இவர்களை கைது செய்தனர்.

## மறைந்த அபூபக்கர் மஷ்ஹூர் மௌலானாவின் ஜனாஸாவில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

யெமன் ஹலரல்மௌத்தில் நல்லடக்கம்





பேருவளை விசேட நிருபர்

ஜோர்தானில் காலமான அலவியா தரீக்காவின் உலக ஆன்மீக தலைவரும் சமகால இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவருமான சங்கைக்குரிய பேராசிரியர் கலாநிதி அஸ்ஸையித் அபூபக்கர் அலவி அல்மஷ்ஹூர் மௌலானாவின் ஜனாஸா அவரது சொந்த தாயகமான ஹலரல்மௌத் தரீம் என்ற ஊரில் அஹ்லுல் பைத்துக்களின் அடக்கஸ்தலத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், ஹலரல்மௌத் பகுதியை சேர்ந்த

04

இன்னொரு கொவிட் அலையா?

## எதிர்கொள்ளும் வல்லமை எம்மிடம் கிடையாது

அவதானமாக இருக்க GMOA எச்சரிக்கை

நாட்டில் கொவிட்19 வைரஸின் மற்றொரு அலையைத் தடுக்க அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். முதல் மற்றும் இரண்டாவது கொவிட் அலைகளை நாங்கள் எதிர்கொண்டது போன்ற சூழ்நிலையை எதிர்கொள்ள எங்களுக்கு வலிமை இல்லை என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் (GMOA) செயலாளர் டாக்டர். ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார் .

நாடு தற்போது இருக்கும் நிலையில் இனி பொது முடக்கத்திற்கு செல்ல முடியாது என்று கூறினார். எனவே, இது போன்ற அலைகள் எழாமல் இருக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். தினமும் பதிவாகும் கொவிட் தொற்றாளர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட சோதனை வசதிகளுடன், அதிகபட்சமாக 150

04


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 ஓகஸ்ட் 03ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 87,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122K042 | LKA18223B038 | LKA36423H047 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 27,500 | 25,000 | 87,500 |

ஏல விற்பனைத் திகதி : 2022 ஓகஸ்ட் 03
தீர்ப்பனவுத் திகதி : 2022 ஓகஸ்ட் 05
வழங்கப்படும் திகதி : 2022 ஓகஸ்ட் 05
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 ஓகஸ்ட் 03, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

எம்.இசட்.எம். ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk**


## தமிழர் பிரச்சினையை தீர்க்க ஜனாதிபதியுடன் பேச தயார்!

கிளிநொச்சியில் சிறீதரன் MP



தமிழ்த்தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசத்தயாராகவே நாங்கள் இருக்கிறோம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் வட்டாரத்தில் மக்களுடனான சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த மண்ணிலே புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் நாங்கள் பேசுவோம்.அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோடும் நாம் பேசுவோம்.

04

## கொவிட் தொற்றாளர் தொகை 12% அதிகரிப்பு

உயிரிழப்போர் தொகையும் கூடியது



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் கடந்த நாட்களுடன் ஒப்பிடுகையில், கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 10% முதல் 12% வரை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

அதற்கிணங்க இந்த மாதத்தில் மாத்திரம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 30 கொரோனா மரணங்கள் இடம்பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்..

பொதுமக்கள் நடைமுறையில் உள்ள சட்ட நியதிகளை பின்பற்றி முகக் கவசத்தை அணிதல்

04

## வான்-ரயில் மோதி விமானப்படை வீரர் பலி

நேற்று அதிகாலை கோர சம்பவம்




களுத்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதமும் விமானப்படை வானும் நேற்று (31) அதிகாலை மோதி விபத்துக்குள்ளானதில் விமானப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மற்றுமொரு இராணுவ வீரர் வைத்தியசாலையில்

04

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில்

## இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்



நாட்டின் தென் அரைப்பாகத்தில் மேக மூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு, தென் மற்றும் மேல் மாகாணங்களில் கரையோரப் பிரதேசங்களில்காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய

04

## ஜூலை மாதம் மட்டும் 20 இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்

வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்




நாட்டில் 20 லட்சத்துக்கும் அதிகமான சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஜூலை மாதத்தில் மாத்திரம் சந்தைக்கு விநியோகித்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மக்களுக்கு தொடர்ந்தும் சமையல் எரிவாயு விநியோகிக்கப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதி தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டார்.

இதற்கமைய நேற்றைய தினமும் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்தது. அதனை தரையிறக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று இன்றைய தினமும் நாட்டை வந்தடையவுள்ளது. தற்போது நாட்டில் பல பகுதிகளில் காணப்பட்ட எரிவாயுவுக்கான மக்களின் வரிசை குறைவடைந்துள்ளது.

04
































## 1,164 சுற்றிவளைப்பில் ...

டீசல் மற்றும் 19,214 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிலர் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமான முறையில் எரிபொருளைப் பதுக்கிவைத்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீதான சோதனைகள் தொடரும், என்றும் இதுபோன்ற அனைத்து சம்பவங்கள் குறித்தும் பொலிஸார் விழிப்புடன் செயற்படுமென அவர் மேலும் கூறினார்.

## இலங்கை மக்களுக்கு...

இந்தியாவிற்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அயல்நாட்டிற்கு முன்னுரிமையளிப்பது இந்தியாவின் முதற்கொள்கையெனவும் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாரம்பரியம் மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகளின் அடிப்படையில் அமைந்துள்ள இரு நாடுகளுக்கு இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகள் மேலும் வலுவடைய வேண்டுமெனவும் இந்திய குடியரசுத் தலைவர், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் 15 ஆவது குடியரசுத் தலைவராக பதவியேற்ற திரௌபதி முர்முவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சனின் விடுதலைக்கு...

ராமநாயக்கவை சந்தித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை கூறினார். மக்கள் மனதை வென்ற அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பூரண சுதந்திரம் கிடைக்கும் என தானும் அனைத்து அரசியல்வாதிகளும் சகல இலங்கையர்களும் எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார். மனிதாபிமானமிக்க அரசியல்வாதியாக, மக்களின் கலைஞராக, மக்கள் செல்வாக்குள்ள பிரபலமாக திகழும் ரஞ்சன் ராமநாயக்க, சுதந்திர குடிமகனாக சமூகத்திற்குத் திரும்பி, உறுதியுடன் சமூக நீதிக்காக பாடுபடுவதை பார்ப்பதே தனது நோக்கம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி மாளிகையின் ...

நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தினால் பெறப்பட்ட பிடியாணையை நிறைவேற்றுவதற்காக சந்தேகநபர்களில் ஒருவரின் வீட்டிற்கு பொலிஸார் சென்றபோது, குறித்த வீட்டில் மேலும் நான்கு இளைஞர்கள் தங்கியிருந்ததுடன், அவர்களுக்கும் இது தொடர்பான குற்ற சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், ஜனாதிபதியின் இல்லத்துக்குள் நுழைந்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு வரும் நிலையில் தாங்களும் தமது நண்பரின் வீட்டிற்கு தலைமறைவாக வந்ததாக தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நுவரெலியாவைச் சேர்ந்த நபரின் வீட்டில் பதுங்கியிருந்தவர்களில் பிங்கிரிய, கொதட்டுவ, களுத்துறை மற்றும் நுவரெலியா பிரதேசங்களைச் சேர்ந்த ஒரு குழுவினரும் அடங்குவர்.

## எரிபொருள் விலைகள் ...

விலை திருத்தப்பட்டது, ஒக்டேன் 92 பெற்றோலின் விலை ரூ. 20 மற்றும் டீசல் விலை ரூ. 20 இனாலும் குறைக்கப்பட்டது.

இன்று இடம்பெறவுள்ள விலை திருத்தத்துக்குள் எரிபொருள் விலை குறைக்கப்படும் என உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா)

## 05ஆம் திகதி வரை...

பாடசாலைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய இரு நாட்களிலும் அதாவது புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீடுகளில் இருந்தவாறு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது ஒன்லைன் ஊடாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு கூறியுள்ளது.

கல்வி அமைச்சரின் தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், போக்குவரத்து சிரமங்கள் இல்லாத பாடசாலைகளை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் இணக்கப்பாட்டுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுமதியுடன் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் திறக்க முடியுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆசிரியரும் குறைந்தபட்சம் 03 நாட்களேனும் பாடசாலைக்கு சமூகமளித்து கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும் வகையில் கால அட்டவணையை தயாரிப்படுத்தல் வேண்டுமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டிற்கான முதலாம் தர மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## இடியுடன் கூடிய மழை... (03 ஆம் பக்கத் தொடர்)

பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 1525 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் சாதாரண அலையுடன் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள்கொந்தளிப்பாகவும்காணப்படும்.

## ஜூலை மாதம் மட்டும்... (03 ஆம் பக்கத் தொடர்)

தொடர்ந்தும் மக்களுக்கு எரிவாயு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக நாளாந்தம் ஒரு லட்சம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்தை கலைத்து...

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள வேண்டுமானால் முதலில் நாட்டின் அரசியலை ஸ்திரப்படுத்த வேண்டும். அரசியலை ஸ்திரப்படுத்த, சமூகத்தை ஸ்திரப்படுத்துவது அவசியம். சமூகம் ஸ்திரமாக இருக்க வேண்டுமானால் மக்கள் தங்கள் கருத்தை தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யாமல் அடக்குமுறை மூலம் சமூகத்தை ஸ்திரப்படுத்தவும், ஆட்சியாளர்களை பாதுகாக்கும் சர்வகட்சி அரசாங்கத்தின் ஊடாக அரசியலை ஸ்திரப்படுத்தவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீண் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக லால் காந்த குற்றம் சுமத்தியுள்ளார். பாராளுமன்றத்தை கலைத்து மக்கள் கருத்து தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது தான் இப்போது செய்ய வேண்டும். எனவே அதனை வற்புறுத்தி பாராளுமன்றத்தை முற்றுகையிடுவதற்கு மக்களுக்கு உரிமை உள்ளது எனவும் லால்காந்த மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மின் கட்டணங்கள்...

என மின்சார சபையானது மின் பாவனையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மின் பட்டியலை பெற்றுக் கொள்ளும் சேவையை பெற்றுக் கொள்வதற்காக மின் பாவனையாளர்கள் குறுஞ்செய்தி ஊடாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது. அதற்கிணங்க "EBILL" இடைவெளி கணக்கு இலக்கம் இடைவெளி மற்றும் மின்னஞ்சல் முகவரியை உள்ளிட்டு 1989 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தியை அனுப்பி அதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் மின்சார சபை தமது வாடிக்கையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## 200 கி.மீ சைக்கிளில் ...

மீட்டுள்ளதாக அறிய வருகிறது.

முல்லைத்தீவு நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த மேற்படி சிறுவன் வவுனியா கெபத்திகொல்லாவ பிரதான வீதியின் புளியங்குளம் காட்டுப் பகுதின் ஊடாக துவிச்சக்கரவண்டியில் செல்வதை பிரதேசவாசிகள் கண்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் பிரதேச மக்கள் இது தொடர்பாக பொலிஸுக்கு அறிவித்துள்ளனர்.

சிறுவனுக்கு உணவு மற்றும் தங்குமிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிய வருகிறது. நெடுங்கேணி பகுதியில் வசிப்பதாகவும் சிற்றன்னை தினமும் தன்னை கொடுமைப்படுத்துவதாகவும் சிறுவன் தெரிவித்துள்ளதோடு வாழைச்சேனையில் உள்ள தனது தாயின் வீட்டிற்கு சைக்கிளில் செல்ல முடிவு செய்தாகவும் சிறுவன் தெரிவித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (பா)

## கொட்டாஞ்சேனையில்...

தெரிவித்துள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொவிட் தொற்றாளர்... (03 ஆம் பக்கத் தொடர்)

உள்ளிட்ட சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றுவது முக்கியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியை 50 வீத மக்கள் மட்டுமே இதுவரை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர் 60 வயதிற்கு மேற்பட்ட 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அந்த தடுப்பூசியை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிலர் இதுவரை முதலாவது தடுப்பூசியைக் கூட பெற்றுக் கொள்ளவில்லை என்ற தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## வான்-ரயில் மோதி... (03 ஆம் பக்கத் தொடர்)

அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர். வீரவில விமானப்படை முகாமில் கடமையாற்றி வந்த வெல்லவாய பிரதேசத்தில் வசிக்கும் சிப்பாய் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 1.33 மணியளவில் குறித்த புகையிரதம் களுத்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்ததாகவும், வான் கடற்கரையிலிருந்து காலி வீதி நோக்கி புகையிரத கடவை ஊடாக திருப்பிய போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின் போது வண்ண சமிக்ஞை அமைப்பு செயற்பாட்டில் இருந்த போதும் வான் கவனக்குறைவாக புகையிரத கடவையை நோக்கி செலுத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது.

## தமிழர் பிரச்சினையை தீர்க்க... (03 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்சவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19 தடவைகள் பேசியிருக்கிறோம். கோட்டபாய ராஜபக்சவுடனும் ஒரு தடவை பேசியிருக்கிறோம். இவ்வாறு இந்த நாட்டில் யார் யார் எல்லாம் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்களோ அவர்களுடன் எல்லாம் தமிழர் தரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 3 ஆம் திகதியன்று பாராளுமன்றில் தனது அக்கிராசன உரையை நிகழ்த்தவுள்ளார். இவர் தனது அக்கிராசன உரையில், புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிப்பாரா? அல்லது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச போன்று அனுராதபுரத்தில் பதவியேற்ற போதும் சரி தனது அக்கிராசன உரையிலும் சரி மக்களால் விரட்டியடிக்கப்படும் வரை தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசாதது போன்று இவரும் செயற்படுவாரா? எனும் சந்தேகம் இப்போது எழுந்திருக்கின்றது.

40 வருடங்களுக்கு மேலான அரசியல் அனுபவத்தை கொண்டுள்ள ஜனாதிபதி இந்த நாடு இப்படி பொருளாதார ரீதியில் அதளபாதாளத்திற்கு போவதற்கு பிரதான காரணமாக இருந்தது. ஒரு இனத்தின் மீது நடைபெற்ற போர் தான் என்பதை புரிந்து வைத்திருப்பார்.

## விபச்சாரத்தில் ஈடுபடும் .. (03 ஆம் பக்கத் தொடர்)

போராட்டத்தினால் பல இலங்கையர்கள் வீட்டில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், பெரும்பாலான பெண்கள் ஆடைத் துறையில் வேலை இழந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஆபத்தான நிலையைக் கருத்தில் கொண்டு தற்காலிக விபச்சார விடுதிகள் உருவாக்கப்பட்டு, பெண்கள் பாலியல் தொழிலாளிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பாலியல் உரிமைகளுக்காக செயற்படும் குழுவான *Standup Movement* இலங்கை, இந்திய செய்திச் சேவை தெரிவித்துள்ளது. கடந்த மாதத்தில் இலங்கையில் விபச்சாரத்தில் 30 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த குழு சுட்டிக்காட்டியுள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்கள் வேலையிழந்துள்ள நிலையில், ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய மையங்களில் வேலை செய்து பாலியல் தொழிலாளிகளாக வருமானம் ஈட்டுவதாக இது தொடர்பான செய்தி சேவை மேலும் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சந்தேகத்திற்கிடமான ... (03 ஆம் பக்கத் தொடர்)

விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸார் கைரேகைச் சோதனையை மேற்கொண்டனர். அதன்படி, கொழும்பு 07 டொரிங்டன் பகுதியில் கைரேகைப் பணியக அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட கைரேகைகளின் எண்ணிக்கை 1000க்கும் அதிகமாகும்.அந்த கைரேகைகளை, குற்றப் பதிவேட்டில் உள்ள குற்றவாளிகளின் கைரேகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். எதிர்காலத்தில் சேதப்படுத்திய நபர்கள் கைது செய்யப்படும்போது, கிடைத்த கைரேகைகளை அந்த நபர்களின் கைரேகையுடன் ஒப்பிட்டுப் பார்க்க திட்டமிடப்பட்டுள்ளது. (பா)

## எதிர்கொள்ளும் வல்லமை... (03 ஆம் பக்கத் தொடர்)

கொவிட் பொசிட்டிவ் நோயாளிகள் உறுதி செய்யப்படுகின்றனர் . இறப்புகளின் எண்ணிக்கையிலும் அசாதாரண அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் உருமாற்றம் அடைந்த கொரோன வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த புதிய வகையானது, பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து அதிகபட்சமாக 12 பேருக்கு பரவும் திறனைக் கொண்டுள்ளது, இது முந்தைய டெல்டா வகைகள் மற்றும் சீனாவில் காணப்படும் மாறுபாடுகளை விட அதிகமாகும் என டொக்டர் அலுத்கே கூறியுள்ளார்.

மக்களிடையே நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும் தடுப்பூசியின் திறன் குறைந்து வருகிறது. எனவே, மக்கள் விரைவில் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மறைந்த அபூபக்கர் மஷ்ஹூர்... (03 ஆம் பக்கத் தொடர்)

பல்லாயிரக் கணக்கான இஸ்லாமியர்கள், இலங்கை நாட்டைச் சேர்ந்த அஸ்ஸெய்யித் அப்துல் காதர் மசூர் மௌலானா, அஷ்ஷெய்க் ஹஸன் பசீர் மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மறைந்த இஸ்லாமிய அறிஞர் உலகின் பல முஸ்லிம் நாடுகளில் சுமார் 83 வரையிலான பல்கலைக்கழகங்கள், உயர் இஸ்லாமிய கலா நிலையங்களை அமைத்து அவற்றை தொடர்ந்து தனது சொந்த நிதியில் பராமரித்துள்ளதோடு 150க்கு மேற்பட்ட தஃவா, சூபித்துவ, இஸ்லாமிய சட்டதிட்ட நூல்களையும் எழுதி உலகளாவிய ரீதியில் புகழ் பெற்று திகழ்ந்தார்.

## லேக் ஹவுஸ் நிறுவனம்....

எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என தகவல் ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.இது தொடர்பில் சிலவார இறுதிப் பத்திரிகைகளிலும் சமூகவலைத்தளங்களிலும் வெளியான செய்திகளில் எந்த உண்மையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தை ஹோட்டலாக மாற்றுவதற்கோ விற்பனை செய்வதற்கோ அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டின் பத்திரிகையின் தாய்வீடான லேக் ஹவுஸ் தொடர்பில் இவ்வாறான முடிவு எடுப்பது எவ்வாறாக இருந்தாலும் அது தொடர்பில் ஜனாதிபதியோ பிரதமரோ அல்லது அரசாங்கமோ எந்தவித பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பு லேக்ஹவுஸ் நிறுவனம் அமைந்துள்ள காணியையும் கட்டிடத்தையும் முதலீட்டாளர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு ஊடக அமைச்சிடம் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. லேக் ஹவுஸ் நிறுவனத்தை விற்பனை செய்யவும் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தில் கொழும்பு நகரில் வேறு இடத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்தை ஆரம்பிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் இந்த காணிகளை வழங்குவதற்கான யோசனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

## பொதுநலவாய...

நேற்று தனது முதல் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது. என்.ஈ.சி நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் இலங்கை வீரர் இசுரு குமார டிலன்க (*Isuru Kumara Dilanka*) வெண்கலப்பதக்கத்தை வென்றார்.

ஆண்களுக்கான 55 கிலோகிராம் பிரிவில் பங்குபற்றிய அவர் மொத்தமாக 225 கிலோகிராம் எடையை தூக்கினார்.

இவர் ஸ்னெட்ச் முறையில் 105 கிலோகிராம் எடையையும் கிளீன் அன்ட் ஜேர்க் முறையில் 120 எடையும் தூக்கி வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

## இன்று முதல் QR...

கஞ்சன விஜேசேகர பொது மக்களிடம் கோரியுள்ளார். இதேவேளை, தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திர முறைமை என்ற QR முறைமைக்கு இன்று முதல் வாகன வருமான அனுமதி பத்திரத்தை கொண்டு பதிவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளுக்கான QR முறைமைக்கு செசி இலக்கத்தை கொண்டு பதிவு செய்ய முடியாத வாகனங்களை இவ்வாறு பதிவு செய்ய முடியும். QR முறைமை தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கி குறித்த முறைமை முழுமையாக செயற்படுத்துவதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். தேசிய எரிபொருள் அனுமதி பத்திர முறைமைக்காக, இதுவரையில் 46 இலட்சத்து 91 ஆயிரத்து 149 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 41 லட்சத்து 59 ஆயிரத்து 357 வாகனங்கள் பெற்றோலுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதோடு 5 லட்சத்து 32 ஆயிரத்து 571 வாகனங்கள் டீசலுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளன.

## சர்வ கட்சி அரசாங்கமே...

பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் அமர்விலும் அதற்கான அழைப்பை அனைத்துக் கட்சிகளுக்கும் விடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளுக்கும் எழுத்து மூலம் அழைப்பு விடுப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன புதிய பிரதமராக பதவியேற்ற பின்னர் நேற்றைய தினம் முதல் தடவையாக கண்டி ஸ்ரீ தலதா மாளிகையைத் தரிசித்தார். அதனையடுத்து அங்கு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதுதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட உடனேயே மக்கள் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறது அது தொடர்பில் தங்களின் கருத்து என்ன என மற்றுமொரு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர்:

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நடைமுறைப்படுத்துவது நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் நலனுக்காகவே.

ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை ஆகியன தற்போது மீள செயற்படுகின்றன. அந்த செயலகங்கள் விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வரப்படும். நீதிமன்றத்தால் எவருக்கும் வழங்கப்படும் அதிகாரங்களை நாம் அவர்களிடமிருந்து பறிக்கப் போவதில்லை.

சட்டத்திற்கு மேலதிகமாக பயங்கரவாத செயற்பாட்டை நிறுத்துவதற்கு மட்டுமே நாம் செயல்பட்டுள்ளோம். வேறு எவருக்கும் நாம் எத்தகைய அச்சுறுத்தலையும் விடுக்கவில்லை. அவ்வாறு இருந்தால் எவருக்கும் அதற்காக நீதிமன்றம் செல்ல முடியும். இளைஞர்களின் குரலுக்கு செவிமடுக்கும் வகையிலேயே இந்த மாற்றங்கள் ஊடாக பாராளுமன்றத்தின் மூலம் பயணிக்கின்றோம்.

## சர்வ கட்சி ஆட்சியை...

சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கைக்கு நிதி வழங்குவதலில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதன் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள் எழ வாய்ப்பே இல்லை. ஆர்ப்பாட்டத்தின் மூலமே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். அமைதியான போராட்டக்காரர்களை விரட்டி விரட்டி கைது செய்வது மிகவும் தவறான செயற்பாடு. அதற்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுப்போம். சர்வதேசமும் குரல் கொடுக்கும். இவ்வாறான செயற்பாடு தொடருமாக இருந்தால் நாட்டுக்கு நிதி வருவதை மறந்து விட வேண்டும்.

தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு சம்மந்தனுக்கு அனுப்பிய கடிதம் எனக்கு கிடைத்துள்ளது. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டு வர வேண்டுமாக இருந்தால் குறுகிய காலத்திற்கு என்றாலும் சர்வகட்சி ஆட்சி அமைய வேண்டும். இல்லையெனில் அரசியல் ஸ்திரத்தன்மையை பேண முடியாது என்றார்.

## அரசியல் கைதிகள்...

இவை எங்களதும் நீண்டகால கோரிக்கைகள்தான். பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிப்பதில் 10 20 வருடங்களாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள். இல்லாவிட்டால் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

காலிமுக போராட்டக்கார இயக்கத்தினர் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை முற்பகல் நடத்திய கலந்துரையாடலில் அழைப்பின் பேரில் கலந்துக்கொண்ட மனோ எம்பி மேலும் கூறியதாவது,

ரணில் இன்று ஜனாதிபதி. அவருடன் அரசியல் காரணங்களுக்காக எதிரணி என்ற முறையில் நாம் முரண்படலாம். முரண்பாடுகள் உள்ளன. ஆனால், அவர் சட்டப்படித்தான் ஜனாதிபதி ஆகியுள்ளார். இயன்றவரை சீக்கிரம் புதிய ஒரு பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு, புதிய மக்கள் ஆணை பெறப்பட்டு, புதிய பாராளுமன்றம் அமைய வேண்டும். ஆகவே சீக்கிரம் "புதிய ஒரு பாராளுமன்ற தேர்தல் தேவை", என்பதையும் மேலதிக ஒரு கோஷமாக சேர்த்துக்கொள்ளுங்கள்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை தான். அதையும் நாம் ஜனாதிபதி ரணிலிடம் சொல்வோம். உங்கள் கோரிக்கை நீண்ட காலமாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள். இல்லாவிட்டால் உங்களுடன் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது என்றார்.

## சகல கட்சிகளும்...

சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்கி நாடு எதிர்நோக்கியுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை முறியடிப்பதற்கு புதிய பாதையில் பயணிப்பதே தமது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மல்வத்து மகா விகாரை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது,

நாடும் நாட்டின் பொருளாதாரமும் அழிவின் விளிம்பில் இருந்ததால் தான் நான் முதலில் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டேன். ஒரு நாடாக நாம் இன்று மிகவும் கடினமான இடத்தில் இருக்கிறோம். இந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். சர்வதேச அமைப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு, இந்த பொருளாதாரத்தை சீர்படுத்தி 2023, 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நான் செயற்பட்டு வருகின்றேன். இது கடினமானதொரு பணியாகும். ஆனால் அதனை செய்யவில்லை என்றால், அது இன்னும் கடினமாக இருக்கும். மருந்து கொடுத்து நோயாளியை குணப்படுத்த முயற்சி செய்வதா அல்லது மருந்து கொடுக்காமல் நோயாளியை இறக்க விடுவதா என்று பார்க்க வேண்டும்.

இன்று, இந்தப் பிரச்சினைகளுடன் அரசியலமைப்பில் பல சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன.

அதை அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த சீர்திருத்தங்கள் மூலம் பல்வேறு அழுத்தங்கள் வந்தன. சிறந்த, வலிமையான, நல்ல சக்திகள். அதேபோன்று ஒரு நாட்டை அழிக்கக்கூடிய அழுத்தங்கள். அவை அனைத்துக்கும் மத்தியில் வந்து தற்போது நான் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்றுள்ளேன்.

ஜனாதிபதியாக நான் புதிய பாதையில் செல்ல விரும்புகிறேன். அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து அந்தப் பயணத்தை மேற்கொள்ள விரும்புகிறேன். சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குங்கள். அதற்கு இரண்டு வழிகள் உள்ளன. அதில் ஒன்று 19ஆவது திருத்தத்தை முன்வைக்க வேண்டும்.

அனைவரின் விருப்பத்திற்கும் ஏற்ப திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதிலிருந்து தேசிய அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். இரண்டாவதாக, பாராளுமன்றத்தில் கண்காணிப்பு ஆணைக்குழுவை நியமித்து, அதன் மூலமும் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கலாம். அதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த தேசிய சபைக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் புத்திஜீவிகள் எவ்வாறு இதனை ஒழுங்கமைப்பது, சீர்திருத்தங்கள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவை அனைத்தும் செய்யப்படும். இவை நமக்கு முக்கியமான விடயங்கள் ஆகும். அதனால், சர்வகட்சி அரசாங்கம் அல்லது அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தை அரசாங்கமாக ஸ்தாபித்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நான் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அறிவித்தேன்.

இப்போது உருவாகியுள்ளது கடைசி சந்தர்ப்பமாகும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு பொதுவான திட்டமொன்றையாவது உருவாக்க வேண்டும் என்றார்.

# ஆடிப்பூரம்

உலக மக்களை காக்க சக்தியாக, அம்பாள் உருவெடுத்த புண்ணிய தினம் ஆடிப்பூரம் என்று கூறப்படுகிறது. இந்த தலைசிறந்த நாளிலேயே பெரும்பாலும் சித்தர்களும், யோகிகளும் தவத்தை தொடங்குவதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

ஆடி மாதம் என்பது தட்சிணாயன காலத்தின் தொடக்க காலம். நம்முடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒருநாள். அவர்களது இரவுக்காலமே தட்சிணாயன காலம் ஆகும். அதுவரை வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சூரியன் தனது தெற்கு நோக்கிய பயணத்தை தொடங்கும் மாதம்.



உத்தராயணக் காலம் சிவபெருமானை வழிபட உகந்தது என்றால், தட்சிணாயனம் அவரது இடது பாகத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு உரிய காலம் ஆகும். அம்மனுக்கு உகந்த ஆடி மாதம், நவராத்திரி ஆகிய பண்டிகைகள் இந்த காலங்களில் தான் வரும்.

இந்த ஆடி மாதத்தில் வெள்ளி, செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னையை வழிபட எல்லா நலன்களும் தந்து அருளுவாள். இவ்வளவு சிறப்புகள் கொண்ட ஆடி மாதத்தில் வரும் பூரம் அம்பிகைக்கு மிகவும் உகந்த நாள்.

உலகத்தை படைத்து, காத்து, ரட்சித்து அருளும் அன்னைக்கு மஞ்சள் காப்பு, சந்தனக்காப்பு, குங்குமக் காப்பு நடத்துவார்கள். ஆனால் அன்னைக்கு வளைகாப்பு நடக்கும் நாள் தான் ஆடிப்பூரம். தாய்மை என்பது பெண்களுக்கே உரித்தான ஒரு தனிச்சிறப்பாகும்.

எனவே உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் அன்னைக்கு இந்த நாளில் வளைகாப்பு நடத்தப்படுகிறது.

வளைகாப்பு முடிந்ததும் அன்னையை அலங்கரித்த வளையல்கள் அனைத்தும் பெண் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### காரைக்கால் அம்மையார்



82

புனிதவதியார் கண்ட பரமேஸ்வரன் உலகமெல்லாம் உய்யும் பொருட்டு, புனிதவதியார் பக்தியில் மனம் மகிழ்ந்து உலகிற்கு அம்மையும் அப்பனும் ஆன பரமேஸ்வரன் ஓடிவந்து அவரை நோக்கி, "அம்மையே வருக" என்று அழைத்தார்.

அது கேட்ட புனிதவதியார் "அப்பா" என்று சொல்லிக் கொண்டு பரமேஸ்வரன் திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்தார். சுவாமி அவரை நோக்கி, "உனக்கு வேண்டும் வரம் யாது" என்று வினாவினார்.

புனிதவதியார் வணங்கி நின்று, "சுவாமி! அடியேனுக்கு இறவாத பேரின்பமயமாகிய அன்பு வேண்டும்; இனி பிறவாமை வேண்டும்; பிறக்கினும் தேவரீரை ஒரு காலமும் மறவாமை வேண்டும்; இன்னும் தேவரீர் திருநிருத்தஞ் செய்யும்பொழுது, தேவரீருடைய திருவடியின் கீழே சிவானந்தத்தை உடையேனாகி, தேவரீரைப் பாடிக் கொண்டு இருத்தல் வேண்டும்." என்று விண்ணப்பஞ்செய்தார். (தொடரும்)

சுவாமி அவரை நோக்கித் "தென்றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத் தரிசித்து, பேரானந்தத்தோடு நம்மைப் பாடிக்கொண்டிரு" என்று அருளிச்செய்தார். அது கேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ்கரித்து அநுமதி பெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டுக்குத் தலையினால் நடந்து சென்றார்.

சுவாமியுடைய திருநடனத்தைத் தரிசித்து, "கொங்கை திரங்கி" என்னும் மூத்த திருப்பதிகத்தையும், "எட்டியிலவமீகை" என்னுந் திருப்பதிகத்தையும் பாடினார். அவர் சுவாமியுடைய தூக்கிய திருவடியின் கீழே சிவானந்தத்தை அநுபவித்துக் கொண்டு எக்காலமும் இருக்கின்றார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### புதன் பகவான்





(19194) பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று சொல்வார்கள். இதில் பொன் என்பது எதைக் குறிக்கும்?
**குருவை குறிக்கும்.**

(19195) குரு எதற்கு அதிபதி? **செல்வத்துக்கான அதிபதி**

(19196) ஜாதகத்தில் எதன் பலன் பலமாக இருக்க வேண்டும்?
**புதன்**

(19197) எதன் பலம் இருப்பதைவிட புதன் பலமாக இருக்க வேண்டும்? **குருவின் பலம் இருப்பதைவிட புதன் பலமாக இருக்க வேண்டும்**

(19198) ஜோதிடத்தில் புதனை என்னவென்று சொல்லுவார்கள்? **`வித்தைக்காரகன்',**

(19199) `வித்யாகாரகன்' என்று சொல்வது யாரை? **புதனை**

(19200) புதனை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?
**`மாதுளக்காரகன்'**

(19201) ஜாதகரின் தாய்மாமனுக்குரிய யோகங்களைக் கூறுபவர் யார்? **புதன்தான்.**

(19202) தொடக்கப்பள்ளியில் கல்வி பயில்வதிலிருந்து கல்லூரிப் படிப்புவரை ஒருவரின் படிப்புக்குக் காரணமாக இருப்பவர் யார்? **புதன் வித்யாகாரகன் தான்**

(19203) கல்வி, கலை, வித்தைகளுக்கு அதிபதி யார்?
**புதன் கிரகம்.**

(19204) எந்த ஒரு விஷயத்தையும் கண்ணால் பார்த்தவுடன் அதை கையால் செய்வதற்கு எதன் அனுக்ரகம் வேண்டும்? **புதன்**

(19205) நம் வாழ்க்கைக்கு அடிப்படையான கல்விச் செல்வத்தை வழங்குபவர் யார்? **புதன்**

(19206) புதன் ஒரு விசித்திரமான கிரகம். செவ்வாயைப் போலவே புதனும் இரு ஆதிபத்திய கிரகமாகும். ஜோதிட ஆச்சர்யமாக மிதுனத்தில் ஆட்சி பெறும் புதன், ஆட்சி வீடான கன்னியில் உச்சம் பெறுகிறார். மீனத்தில் நீசமடைகிறார். அறிவு, ஞானம் இரண்டுக்கும் அதிபதி யார்? **புதன்**

(19207) படிப்பறிவு, பட்டறிவு இரண்டையும் மனிதனுக்கு உணர்த்துபவர் யார்? **புதன்**

# வெள்ளவத்தை, மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய பால்குட பவனி இன்று

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு விரைவில் தீர்வு ஏற்பட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழும் நிலை நிலை ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருள் வேண்டி கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தில் சண்டி ஹோமம் நடத்தப்பட்டது. இந்த சண்டி ஹோமம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 27ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

இந்த சண்டி ஹோமத்தையொட்டி தினமும் காலையும் மாலையும் விசேட ஹோமம் நடத்தப்பட்டது. இந்த சண்டி ஹோமத்தை தொடர்ந்து தினமும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த சண்டிகா ஹோமத்தைத் தொடர்ந்து இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது. இந்த இலட்சார்ச்சனை இருபத்தி ஏழாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி பால்காவடி பவனி நடைபெற இருக்கின்றது.

5ஆம் திகதி தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 7ஆம் திகதி நீர்வெட்டு உற்சவமும் நடைபெற இருக்கிறது.

இந்த உற்சவ காலங்களில் தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட இருக்கின்றது. எனவே அடியவர்கள் அனைவரும் மஹா சண்டி ஹோமத்திலும் அதுபோல் ஆடிப்பூர உற்சவத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளைப் பெற்று உய்யுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் அழைக்கின்றனர். அதுபோல தினமும் நடத்தப்படுகின்ற அபிஷேகங்கள், பூஜைகளுக்குத் தேவையான பால், இளநீர், மலர்கள் ஆகியவற்றையும் வழங்கி அம்பாளின் அருள் கடாட்சத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளளப்படுகின்றனர்.



அதுபோல் அன்னதானத்திற்கு அவசியமான அரிசி, காய்கறிகள் போன்ற பலசரக்கு சாமான்கள் கொடுத்து அம்பாளின் திருவருள் பெற்று உய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தின் பால்குட பவனி எதிர்வரும் 2022.08.01ஆம் திகதி ஆடிப்பூரத் தினத்தன்று நடைபெற இருக்கின்றது. இந்த பால் குட பவனி கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து புறப்பட்டு லோரன்ஸ் வீதி, அமரசேகர மாவத்தை, ஹெவலொக் வீதி ஊடாக கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தை வந்தடையவுள்ளது.

இவ்வாலயத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திவ்விய இலட்சார்ச்சனை பூர்த்தியும் ஸ்ரீ வரலட்சுமி விரதமும் நடைபெறவுள்ளது.


இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 2022.08.06ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆலயத்தில் இருந்து புறப்பட்டு மயூரபதி, ஹெவலொக் வீதி, பாமன்கடை, டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, ஸ்டேசன் ரோட், மெரைன் டிரைவ் வீதியாக சென்று கின்ரோஸ் இந்து சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். இங்கு தீர்த்தோற்சவம் முடிவுற்றதும் சார்லிமன் ரோட், காலி வீதி வழியாக பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலையும் அடையவுள்ளது.

அன்று மாலை 6 மணிக்கு இந்திர விமானத்தில் அம்பாள் நகர வலம் வரும் நிகழ்வு நடைபெறவுள்ளது. பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோவிலிருந்து புறப்படும் இந்திர விமான நகர வலம் காலி வீதி, ருத்திரா மாவத்தை, எம்டன் லேன், டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, பாமன் கடை, ஹெவலொக் றோட் வழியாக மயூரபதி |ஆலயத்தை வந்தடையவுள்ளது. எதிர்வரும்8ஆம் திகதி பூங்காவனம் , கற்பூரத் திருவிழா என்பன நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி காலை மாரியம்மன் தாலாட்டு, திருக்குளிர்த்தி என்பனவும் மாலை 4 மணிக்கு வைரவர் மடையும் நடைபெறும்.

ருக்மணிகாந்தன்...



கொழும்பு காக்கைத்தீவு களனி கங்கை சங்கமத்தில் ஆடி அமாவாசை விரத பிதிர் கடன் கிரியைகள் இடம்பெற்றதை படத்தில் காணலாம்.
(படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)





உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்த சாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலய மஹோற்சவத்தில் கரகம், கும்மி இடம்பெற்றதுடன், மூலஸ்தானத்தில் கரகச் செம்பின் விளிம்பில் "வாள்" அபூர்வமாக நிற்பதை படத்தில் காணலாம்.
(படம்: உடப்பு குறூப் நிருபர்)



கொழும்பு - 15 அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பதேவஸ்தானத்தின் வருஷாபிஷேகத் திருவிழாவையொட்டி தேரோட்டம் ( 31 ) நடந்தபோது எடுத்த படம்.
(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்

## நாதப் பிரம்ம யோகம் - 30



புராணக்கதைகளில் தேவரிஷி நாரதர் பூவுலகத்தில் எப்படி ஆன்மீக வளர்ச்சி எப்படி இருக்கிறது? அதை வளர்ப்பது எப்படி என்ற எண்ணத்துடன் கடவுளை அடையும் வழி எது? ஏன் கடவுளை அடைவது கஷ்டமான காரியமாக இருக்கிறது போன்ற கேள்விகளுடன் வைகுண்ட த்திற்குச் சென்றார். நாரதரை நோக்கி மக்கள் எப்படி இலகுவாக தபஸினைச் செய்வது என்று கேட்டார்கள். நாரதர் அதற்கு இறைவனிடம் இதற்குரிய சரியான வழியினைக் கேட்டறிந்து சொல்வதாக கூறினார்.

வைகுண்டத்திலிருந்து நாரதர் திரும்பும் போது மகாவிஷ்ணுவிடன் பகவானே சாதாரண மக்களிற்கு உங்களுடைய சான்னித்தியத்தை அறிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது, உங்களை அறிந்துகொள்வதற்கான இலகுவான தெய்வீகத்தை உணர்ந்து அறிவதற்கான வழியினை எமக்கு பின்பற்றுவதற்கும், பயிற்சிப்பதற்குமுரிய வழியினை கூறியருள வேண்டும் என்று வேண்டினார்.

அதற்கு மகாவிஷ்ணு, நாரதரே, நான் வைகுண்டத்தில் வசிப்பதில்லை, நான் யோகிகளின் இதயத்தில் வசிக்கிறேன். நான் தெய்வீக இசையில் வசிக்கிறேன் என்று பதில் கூறினார். இது நாரத சம்ஹிதையில் வருகிறது.

ஆகவே ஒருவன் இறைவனை உணர பஜனை, கீர்த்தனையுடன் கூடிய இசை இலகுவான வழி. நாரத சம்ஹிதையின் இந்த அத்தியாயம் இசை ஒரு தெய்வீக தளமாக எப்படி சாதனைக்கு பயன்படுத்த முடியும் என்று விரிவாக க் கூறுகிறது. புராதன இந்தியாவின் பக்தி இசை என்பது சமூகத்தினதும், சமய வாழ்க்கையினதும் ஒரு மறுக்க முடியாத அங்கம். சாஸ்திரீய நடனமும் இசையின் ஒரு அங்கமாகத்தான் இருந்த து. இசையும் நடனமும் ஆரோக்கியமான பொழுதுபோக்கு மாத்திரம் அல்ல, அது தவிர்ந்து முக்கியமாக பஜனை, கீர்த்தனை போன்றவற்றினூடாக சமூக விழிப்பும் நடைபெறும் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட, சமூக வாழ்க்கை புத்தாக்க உணர்வுடனும், மெய்மறந்த நிலையில் அமைதியை அனுபவிக்கவும் அந்தக்காலத்தில் இசை பயன்படுத்தப்பட்டது.

இன்றைய இரைச்சல் நிறைந்த, பிரச்சனைகள் நிறைந்த உலக வாழ்க்கையில் கூட இசையின் சந்தம் ஒரு உற்சாகமூட்டும் ஒரு அரிய ஊடகமாகத் திகழ்கிறது. இசை இதயத்தை மெல்லியதாக்குகிறது. இது திருப்தி, உற்சாகம், சந்தோஷம் ஆகியவற்றை ஏற்படுத்தி புத்தாக்க உணர்வினை ஏற்படுத்துகிறது. திருமணம், சமய, சமூக நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும், இறப்பிலும் அதற்குத் தகுந்த உணர்ச்சிகளை உருவாக்குவதில் இசை பெரும் பங்கு வகிக்கிறது. இது ஒவ்வொருவருக்கும் மிகச்சிறந்த சூழலை உருவாக்கித் தருகிறது. **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 30

## குறள் தரும் சிந்தனை



தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது

ஈடுபடும் செயல் ஒன்றும் பெரிதல்ல என இகழ்ச்சியாகக் கருதாமல், முற்றிலும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அச்செயலில் இறங்க வேண்டும்.

# நாட்டின் நெருக்கடியை பயன்படுத்தி அப்பாவிகளை ஏமாற்றும் கும்பல்கள்!

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒருபுறம் நிலவிக் கொண்டிருக்கையில், மறுபுறத்தில் திருட்டுகளும் குற்றச்செயல்களும் பெருகி வருகின்றன. நாட்டின் நிலைமை சமீப காலமாக பரபரப்புடன் உள்ளதன் காரணமாக, இன்றைய நெருக்கடி நிலைமையை தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியவாறு, திருடர்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர். அதேசமயம் வியாபாரிகளில் பலர் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தியவாறு கொள்ளை இலாபம் ஈட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

திருடுவது மாத்திரம் குற்றமல்ல. மக்களிடமிருந்து வியாபாரிகள் கொள்ளை இலாபம் ஈட்டுவதும் திருட்டுக்கு ஒப்பான குற்றமேயாகும். திருட்டும், கொள்ளை இலாபமும் அப்பாவி மக்களிடமிருந்து பொருளை அபகரிக்கும் குற்றங்களாகும். குற்றமிழைப்பவர்கள் பணமீட்டுகின்றனர். அப்பாவிகள் பணத்தைப் பறிகொடுக்கின்றனர். திருடர்களும், கொள்ளை இலாபம் ஈட்டுபவர்களும் ஒருபோதுமே நீதிநியாயங்களோ அல்லது கருணையோ பார்ப்பதில்லை.

விற்பனை நிலையங்கள் பலவற்றில் இடம்பெறுகின்ற முறைகேடுகள் ஏராளம். கடைகளின் களஞ்சியங்களில் பெருந்தொகையான பொருட்களைப் பதுக்கி வைத்திருப்பர். அவையெல்லாம் அவ்வியாபாரிகளால் நீண்ட காலத்துக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். பொருட்களுக்கு விலை அதிகரிக்கப் போவதை அவ்வியாபாரிகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருப்பதுண்டு. தங்களுக்கு சாதகமான வேளை வந்ததும், அவ்வியாபாரிகள் தங்களிடமுள்ள பொருட்களை பெருந்தொகை விலைக்கு விற்பனை செய்து கொள்ளை இலாபம் ஈட்டுவதுண்டு.

'வியாபாரத்தைப் பொறுத்தவரை இது சகஜம்' என்பார்கள். வியாபாரிகளில் பெரும்பாலானோர் மனசாட்சி மற்றும் நீதி நியாயம் பார்ப்பதில்லை. அதனால்தான் அத்தகைய வியாபாரிகள் பெருந்தொகையாக பணம் சம்பாதித்துக் கொள்கின்றனர். கொள்ளை இலாப வர்த்தகம் புரிவோருக்கு நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியானது மிகவும் வாய்ப்பாகவே அமைந்துள்ளது. பணவீக்கம், டொலர் பற்றாக்குறை என்றெல்லாம் காரணங்களைக் கூறி அனைத்துப் பொருட்களின் விலைகளையும் அதிகரித்துக் கொள்வது அவர்களது வழக்கம்.

கொள்ளை இலாபத்திலிருந்து நுகர்வோர் தப்பிக் கொள்வது இலகுவான விடயமல்ல. மக்களைப் பொறுத்தவரை எவ்வாறாவது பாவனைப் பொருட்களை வாங்கிக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அவற்றின் விலைகள் பற்றியோ அல்லது தரம் பற்றியோ சிந்திப்பதற்கு அவகாசம் இருப்பதில்லை. எனவே இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். கொள்ளை இலாப வர்த்தகர்களிடமிருந்து அவர்கள் அநியாயமாகச் சுரண்டப்படுகின்றனர்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, திருட்டுச் சம்பவங்கள் நாட்டில் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன. முன்னரெல்லாம் திருடர்களின் இலக்கு பணம் அல்லது நகைகளாக இருக்கும். ஆனால் இன்று அவர்களின் இலக்கு பெற்றோல்! கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு இடங்களிலும் பெற்றோல் திருட்டு அண்மைக் காலமாக அதிகரித்திருக்கின்றது. மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார்களில் இருந்து சூட்சுமமான முறையில் பெற்றோலை அபகரிப்பதில் திருடர் கும்பல்கள் இயங்கி வருகின்றன.

பெற்றோல் திருடர்களில் பலர் தனியாக திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர். சிலர் குழுக்களாக இயங்கி வருகின்றனர். வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் வீடுகளில் நிறுத்தி வைக்கப்படுகின்ற வாகனங்களில் இருந்து பெற்றோல் திருடப்பட்டுள்ள சம்பவங்கள் அதிகளவில் நடந்துள்ளன. கொழும்பில் இவ்வாறான ஏராளமான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. தொடர்மாடி வீடுகள் மற்றும் தனியான வீடுகளில் நிறுத்தி வைக்கப்படுகின்ற மோட்டார் சைக்கிள்கள்தான் கள்வர்களின் முதல் இலக்காகும்.

நள்ளிரவுக்குப் பின்னர்தான் அதிக சம்பவங்கள் நடந்துள்ளன. மக்கள் பெரும்பாலும் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ள நேரம் அதுவென்பதால், திருடர்கள் அவ்வேளையிலேயே திருட்டுகளில் ஈடுபடுகின்றனர். மோட்டார் சைக்கிள்களின் பெற்றோல் தாங்கியின் அடிப்புறத்திலுள்ள குழாயை அகற்றி விட்டு, அதனுள் உள்ள பெற்றோலை முழுவதுமாக அபகரித்துச் சென்றுள்ள சம்பவங்கள் அதிகளவில் நடந்துள்ளன.

திருடர்கள் தங்களது தேவைக்காக பெற்றோலை திருடுகின்ற சம்பவங்கள் மிகவும் அரிதாகும். அதிக விலைக்கு விற்பதற்காகவே அவர்கள் பெற்றோலைத் திருடுகின்றனர். ஒரு லீற்றர் பெற்றோலை திருடர்கள் மூவாயிரம் ரூபா வரை விற்பனை செய்வதாக தகவல்கள் வருகின்றன. இன்றைய எரிபொருள் நெருக்கடியை வாய்ப்பாகப் பயன்படுத்தி திருடர்கள் தங்களது தொழில் முறையையே மாற்றிக் கொண்டுள்ளனர்.

திருடர்கள் தாமாக ஒருபோதுமே திருந்திக் கொள்ளப் போவதில்லை. திருடர்களிடமிருந்து மக்கள்தான் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளது. பெற்றோல் மாத்திரமன்றி, தங்கள் வசமுள்ள பெறுமதியான பொருட்கள் ஒவ்வொன்றிலுமே மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம். இல்லையேல் தங்களது பெறுமதியான பொருட்களை திருடர்களிடம் பறிகொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

editor.tkn@lakehouse.lk

# கொழும்பு -11 அல் ஜாமிஉல் அல்பர் பள்ளிவாசலில் முஹர்ரம் புதுவருட நிகழ்வு

ஹிஜ்ரி 1444 இஸ்லாமிய முஹர்ரம் புதுவருட விசேட நிகழ்வு கொழும்பு 11 அல் ஜாமிஉல் அல்பர் பள்ளிவாசலில் நடைபெற்றது. இதனை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கொழும்பு 11 அல் ஜாமிஉல் அல்பர் பள்ளிவாசல் மற்றும் கொழும்பு மாவட்ட அஹதிய்யா சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தசாசன, கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதியாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கலந்து கொண்டார்.

பள்ளிவாசல் தலைவர் ரீ.எம்.அமீர் சுல்தான், செயலாளர் ஏ.அன்வர் ஹாஜி, பள்ளிவாசல்கள் தலைவர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர். இஸ்லாமிய முஹர்ரம் புதுவருட நிகழ்வை மௌலவி ஸயீட் ஜெம்சித் லுத்பான் (இஸ்லாமி) கிரா அத் ஓதி ஆரம்பித்து வைத்தார். வரவேற்புரையை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் நிகழ்த்தினார்.







பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உரையாற்றினார். விசேட பேச்சை கொழும்பு மாவட்ட அஹதிய்யா சம்மேளன பொதுச் செயலாளர் அஷ்ஷைஃக் மொஹம்மட் பக்கீஹுடீன் தமிழில் உரையாற்றினார்.






சிங்களத்தில் அஹதிய்யா அரபிக் கல்லூரி உப அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.பரூட்(இஹ்சானி) உரையாற்றினார். றிழ்வானியா அரபிக் கல்லூரி மாணவர்களின் ஹசீதா நிகழ்வும் இடம்பெற்றது.

தமிழ்,சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாணவர்களின் உரைகள் இடம்பெற்றன. பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விசேட துஆப் பிரார்த்தனையை அஷ்ஷெய்ஹ் அல் ஆலிம் ஹாழி அலாவுதீன் நிகழ்த்தினார். நன்றியுரையை ஜாமியுல் அல்பர் பள்ளிவாசல் உறுப்பினர் ரபீக் புஹாரி நிகழ்த்தினார்.

**ஏ.எஸ்.எம்.ஜாவித், அஷ்ரப் ஏ சமட்**

# கிழக்கில் வேகமாக பரவும் டெங்கு நோய்; மக்களுக்கு சுகாதாரத்துறை எச்சரிக்கை!

கிழக்கு மாகாணத்தில் மழைக்கால நிலையைத் தொடர்ந்து மீண்டும், டெங்குநோய் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதாரத் துறையினர் பொதுமக்களை அறிவுறுத்தி வருகின்றனர்.

கொடிய டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்கள் அலட்சியம் காட்டாது, அவதானமாகத் தொழிற்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பொதுமக்களுக்கு தனித்தனியாக விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது ஒலிபெருக்கி அறிவித்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் போது, டெங்கு பரவாது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் பொதுமக்கள் தெளிவாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

நாடளாவிய ரீதியில் பரவும் டெங்கு தொடர்பில் பொதுமக்கள் எப்பொழுதும் அவதானம், முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும், சுகாதாரத்துறையினரின் நடவடிக்கைகளுக்கு நிறைவான ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், விழிப்புடன் தொழிற்பட்டு முன்கூட்டியே பாதுகாப்புப் பெற வேண்டும் எனவும் சுகாதாரத் துறையினர் மேலும் வலியுறுத்துகின்றனர்;.

கொடிய டெங்குநோய் தொடர்பில் தற்பொழுது கிழக்கு மக்கள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். மக்கள் தங்களது குடியிருப்பு வீடுகள், அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தம், சுகாதாரமாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இதன் போது வலியுறுத்தப்படுகின்றது.





வீட்டில் பயன்படுத்திய சிரட்டை, யோகட் கப், பழைய ரயர், குரும்பை மற்றும் பூச்சாடி, வீட்டுக் கூரை பீலி, குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட நீர்தேங்கும் பொருட்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். குடிநீர்க் கிணறுகளை குப்பை, கூளங்கள் உட்செல்லாதவாறு மூடிப் பாதுகாக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் டெங்கு ஒழிப்பு துப்புரவுப் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாரத்தில் 30 நிமிடங்களை டெங்கு துப்புரவுக்காக ஒதுக்கி, பணிகளை முன்னெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். டெங்கு தொடர்பில் விடுக்கப்படும் சுகாதார விதிமுறைகளை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பை அடியோடு ஒழிப்பதற்கு பொதுமக்கள் நிறைவான ஒத்துழைப்பு நல்க வேண்டும் என சுகாதாரத்துறையினர் மேலும் அறிவுறுத்தியுள்ளனர். அத்துடன் வெளியூர்ப் பயணங்களின் போதும், தங்களது பாதுகாப்புத் தொடர்பில் அதிகம் கவனம் வெலுத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் நிறைவான ஒத்துழைப்பு வழங்காத பட்சத்தில் டெங்கை ஒழிப்பது கடினமான காரியமாகும். ஆகையால், ஒரு நாள் அல்லது இரு நாட்கள் துப்புரவுப் பணிகளுடன் தங்களது பொறுப்பு நிறைவடைந்து விட்டது என எண்ணி பணிகளைக் கைவிடாது, தொடர்ந்து நமதும், சுற்றுப்புறச் சூழல் துப்புரவிலும் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரப்படுகின்றது.

கழிவுகள், குப்பை, கூளங்களை கண்டபடி எங்கும் வீசாது, பாதுகாப்பாகச் சேகரித்து உள்ளூராட்சி சபைகளின் கழிவகற்றும் வாகனங்களில் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பிரதேசங்களில் ஆங்காங்கே காணப்படும் வெற்றுக் காணிகளில் கழிவுகள், குப்பை கூளங்கள் வீசுவதை அல்லது பாதுகாப்பற்ற முறையில் கொட்டுவதிலிருந்து முற்றாகத் தவிர்ந்து கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. காய்ச்சல் ஏற்பட்டவுடன் வீட்டு வைத்தியம் மேற்கொள்ளாது, அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் அல்லது தரமான வைத்தியரிடம் தாமதியாது சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். சிகிச்சை பெற்றும் காய்ச்சல் குணமடையாது இரண்டு நாட்களுக்கு நீடிக்குமானால், முறையான இரத்தப் பரிசோதனை அவசியமென வைத்தியர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர். கர்ப்பிணித் தாய்மார்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதுடன், குறிப்பாக சிகிச்சை பெற்றும் காய்ச்சல் குணமடையாது இரண்டு நாட்களுக்கு நீடிக்குமானால், தாமதியாது இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது அவசியமெனவும்; தெரிவிக்கப்பட்டுள்ளது

காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியரினால் சிபார்சு செய்யப்பட்ட மருந்து மாத்திரைகளை மாத்திரம் உட்கொள்வதுடன், வேலைத்தலங்கள், பாடசாலைக்குச் செல்லாது வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும் எனவும் வைத்திய ஆலோசனையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முகம்மட் றிஸான்**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இருதயநோய் சிகிச்சை பிரிவு அங்குரார்ப்பணம்

அம்பாறை மாவட்டத்தின் பாணமை தொடக்கம் கல்முனை வரையிலான கரையோரப் பிரதேசத்தில் உள்ள மூவின சமூகங்களும் சிறந்த முறையில் சிகிச்சை பெறும் வகையில் இம் மாவட்டத்தின் மத்தியில் சுகாதார அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அமைக்கப்பட்ட வைத்தியசாலை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை ஆகும். இவ்வைத்தியசாலையின் வளர்ச்சிப் பாதையில் மற்றொரு மைல்கல் இருதய நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதற்காக இவ்வைத்தியசாலையில் அண்மையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள இருதய நோய் சிகிச்சைப் பிரிவு ஆகும். அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஆஸாத் எம். ஹனீபா அவர்களின் அயராத முயற்சியினால் இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலைக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட இருதய நோய் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் எம். ஏ.நௌசாட் அலியினால் வைபவ ரீதியாக இப்பிரிவு திறந்து வைக்கப்பட்டது.





மக்களிடையே அதிகளவாக தற்போது காணப்படும் தொற்றா நோய்களுக்குள் இருதய நோய், மாரடைப்பு மற்றும் உயர் குருதியமுக்கம் முக்கிய இடத்தில் காணப்படுகின்றன. தற்காலத்தில் திடீர் மாரடைப்புகளால் இள வயது மரணங்களும் சம்பவிக்கின்றன. இதற்கான உயர்தரத்திலான சிகிச்சை வழங்குவதற்கு டொக்டர் நௌஸாத் அலியின் நியமனம் இப்பிரதேச மக்களுக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். அத்தோடு இருதய நோய்க்கான சகல சிகிச்சைகளையும் விசேட வைத்திய நிபுணரால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நோயாளர்கள் பெற்றுக் கொள்ளலாம் என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திறப்பு நிகழ்வின் போது தெரிவித்தார்.

இச்சிகிச்சைப்பிரிவு திறந்து வைக்கப்பட்ட ஆரம்ப நாளின் போதே முதலாவது இருதய நோயாளிக்கான சிகிச்சையும் விசேட வைத்திய நிபுணரினால் மேற்கொள்ளப்பட்டது.இவ்வைத்தியசாலையில் கதிரியக்கவியல், தோல் மருத்துவம், உட்சுரப்பியல், ஹிஸ்டோபோதாலஜி, சிறுநீரகவியல், கண் மருத்துவம், மனநல மருத்துவம் போன்ற சேவைகளின் மூலம் மக்கள் பெரிதும் நன்மை அடைகின்றார்கள்.

பல சிரமங்களுக்கு மத்தியில் ஏனைய மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் இந்நோய்க்கான சிகிச்சையை பெறுவதற்கு சென்ற நோயாளர்கள் தற்போது காலடியில் இச்சேவையை பெறக் கூடியதாக உள்ளது.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலரின் மலசலகூடத்தில் எரிபொருட்கள் மீட்பு

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குள் எரிபொருள் பதுக்கிவைக்கப்பட்டதாக கிடைத்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து பொலிசார் சோதனை செய்தபோது 69 லீற்றர் எரிபொருட்கள் மலசலகூடங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலரின் அலுவலகம் தங்குமிடத்தில் எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக மக்கள் தெரிவித்த முறைப்பாட்டினை தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 30.07.2022 புதுக்குடியிருப்பு பொலிசார் சோதனை செய்தபோது சோதனையில் சுமார் 69 லீற்றர் எரிபொருள் மீட்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலரின் அலுவலகம் அல்லது இருப்பிடத்தில் எரிபொருள்



பதுக்கப்பட்டிருப்பதாக தகவலறிந்த பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் முற்றுகையிட முற்பட்டவேளை சம்பவ இடத்திற்கு வந்த பொலிசார் மாவட்ட அரசாங்க அதிபரின் அனுமதியுடன் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் பிரதேச செயலகத்தினை திறந்து சோதனை நடத்தியுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் செயலாளர் அலுவலகம், வாகனதரிப்பிடம், களஞ்சியஅறைகள், பிரதேச செயலாளர் விடுதி என்பன சேதனை இடப்பட்டுள்ளன.

இதன்போது பிரதேச செயலாளரின் அலுவலகத்திற்குள் உள்ள மலசல கூடத்தில் இருந்து இரண்டு கான்களில் வைக்கப்பட்ட டீசல் மற்றும் மண்ணெண்ணைய் மீட்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலாளரின் விடுதியின் மலசலகூடத்திற்குள் வைக்கப்பட்ட பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

## வடக்கின் உதயம் (Vadakkin Uthayam)

# திருநல்லூர்த் திருப்புகழ் வெளியீட்டு நிகழ்வு

**(யாழ்.விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம் இருபாலையூர் தவ.தஜேந்திரனால் நல்லூரான் மீது பாடப்பட்ட திருநல்லூர்த் திருப்புகழ் வெளியீட்டு நிகழ்வும் இசை அர்ப்பணமும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருநல்லூர்த் திருப்புகழ் வெளியீட்டு நிகழ்வும் இசை அர்ப்பணமும் இடம்பெற்றன. திருநல்லூர்த் திருப்புகழ் நூலை பேராசிரியர் நா. சண்முகலிங்கன் வெளியீட்டு வைக்க முதல்பிரதியை வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

திருநல்லூர்த் திருப்புகழ் இசைத்தொகுப்பை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா வெளியிட்டுவைக்க யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பெற்றுக்கொண்டார்.

இறுதியாக திருநல்லூர்த் திருப்புகழ் தொகுப்பை உருவாக்க பங்களித்தவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் திருநல்லூர்த் திருப்புகழ் இசை அர்ப்பணமும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா, யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்களான பொன். பாலசுந்தரம்பிள்ளை, நா.சண்முகலிங்கன், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணம் இருபாலையூர் தவ.தஜேந்திரனால் நல்லூரான் மீது பாடப்பட்ட திருநல்லூர்த் திருப்புகழ் வெளியீட்டு நிகழ்வும் இசை அர்ப்பணமும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 12 பேர் கைது

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கிலிருந்து கடல்வழியாக வெளிநாடு செல்ல முயற்சித்த 12 பேர் மணற்காடு பகுதியில் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் அதிகாலை பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வடமராட்சி கிழக்கு கடற்பகுதி ஊடாக அவுஸ்ரேலியா செல்வதற்கு குழு ஒன்று திட்டமிட்டு தயாராகியுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ள நிலையிலேயே குறித்த மணல்காடு வீடு சுற்றிவளைக்கப்பட்டு குறித்த 12 பேரும் கைது செய்யப்பட்டதுடன் வீட்டின் உரிமையாளர் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அண்ணனுடன் சைக்கிளில் சென்ற சிறுவன் பிக்கப் மோதி படுகாயம்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் 11வயதுச் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். சாவகச்சேரியில் இருந்து அண்ணனுடன் கல்வயல் ஊடாக மட்டுவில் நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்த 11வயது சிறுவனே இவ்வாறு விபத்தில் சிக்கி கையில் படுகாயமடைந்துள்ளார். துவிச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் இருந்து சிறுவன் கீழே விழுந்த நிலையில் பின்பக்கமாக வந்த பிக்கப் வாகனம் சிறுவனின் கையின் மேலாக ஏறியதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் மட்டுவில் வடக்கு சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 11வயதான சிறுவனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் தேவாலயம் மீது மின்னல் தாக்குதல்

யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள தேவாலயமொன்றில் ஞாயிறு ஆராதனை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, தேவாலயத்தை மின்னல் தாக்கியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. குருநகர், புனித ஆரோக்கியநாதர் தேவாலயத்தில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனை இடம்பெற்றபோதே இந்த சம்பவம் நடந்ததாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று காலை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இடி மின்னலுடன் மழை வீழ்ச்சி பதிவான நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

தேவாலயத்தில் நடந்த மின்னல் தாக்கத்தால் மேற்கூரைப் பகுதிகளும், மின் இணைப்புக்களும் சிறிது சேதமடைந்தன. எனினும், யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி முதலாம் அணி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி முதலாம் அணி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர் பட்டப்படிப்புகள் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ஜஸ்ரின் பி. ஞானப்பிரகாசம், மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி எவ். எல். இம்மானுவல் பெர்ணாண்டோ, திருகோணமலை மறை மாவட்ட பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி நோயல் இம்மானுவல் மற்றும் தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவர் வணக்கத்துக்குரிய அருட் தந்தை கலாநிதி ஜே. சி. போல் றொகான், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மதகுருமார், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



## கிழக்கின் குரல்

# கடன்வாங்கி,கடன் அடைக்கும் பொருளாதார திட்டத்தாலே நாடு அதலபாதாளமடைந்தது

**(காரைதீவு குறூப் நிருபர்)**

கடன் வாங்கி கடன் அடைக்கும் கோட்டாவின் பொருளாதார கொள்கையாலே,நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் சென்றதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் அம்பாறை மாவட்ட உறுப்பினர்களுடன் நடாத்தப்பட்ட சமகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டத்தில் நேற்று (31) உரையாற்றியபோதே இவ்வாறு குறிப்பிட்டார். காரைதீவில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது,

பொருளாதாரத்தில் நாடு இன்று பின்னடைந்துள்ளது.மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது போர் நடத்துவதற்கு முன்யோசனையின்றி கடன் வாங்கியதால் வந்த வினையே இது. இக்கடன்களை அடைப்பதற்கு மேலும்,மேலும் கடன்கள் பெறப்பட்டதால்தான் இந்த நிலை ஏற்பட்டது.

கடந்த வரவு செலவு திட்டத்தில் 74 வீதமான செலவினங்கள் கடனை அடைப்பதற்கானதாக இருந்தது. 2019 ஜனாதிபதி தேர்தலில்,வரிவசூல்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும் என்றார். இதை,அப்போதைய நிதியமைச்சர் மங்கள சமரவீர கடுமையாக எதிர்த்தார்.



இந்த விஞ்ஞானம் நடைமுறைப்படுத்தப் பட்டால், லெபனான் வெனிசுலா போல இலங்கை மாறும் என்றார்.இதைப் பொருட்படுத்தாத கோட்டாபயராஜக்ஷ தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினார்.

இதனால்,நாட்டின் 25 வீத வரவு இல்லாமல் போனது .வெளிநாட்டின் நிதி உதவிகள் தடைப்பட்டன.

இந்நிலையில் மத்திய வங்கியில் இருந்த தங்கம் மற்றும் டொலர்களை விற்றனர். அதுமட்டுமல்ல உள்ளூர் உற்பத்தியை பாதிக்கும் வண்ணம் உரப்பாவனைக்கு தடை விதிக்கப்பட்டது.ராஜபக்ஷக்களின் முகவரை எதிர்ப்பதற்காகவே டலஸை ஆதரித்தோம்.

பணத்தைப் பெற்று ரணிலுக்கு ஆதரவளித்த எம்பிக்கள் துரோகம் செய்துவிட்டனர்.

இன்று, ஜனாதிபதி மாளிகையில் பொதுச் சொத்துக்கு சேதம் ஏற்படுத்தியதாக பலர் கைது செய்யப்படுகின்றனர். ஜனாதிபதி வைத்திருந்த 17.8 மில்லியன் ரூபா பணத்தை பகிரங்கமாக எண்ணி பொலிஸிடம் ஒப்படைத்தவரை கைது செய்கிறார்கள். இந்த பணத்தை வைத்திருந்தவரை விட்டு விடுகின்றனர். மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஆட்சிதான் இன்றும் தொடர்கிறது.அதே தலைமை, அதே பிரதமர், அதே அமைச்சரவை.

இந்த இடத்திலே தமிழ் மக்களாகிய நாங்கள் ஒற்றுமையுடன் தொடர்ச்சியாக செயல்பட வேண்டும் என்றார்.

# 'பிரிந்து நின்றால் இழந்து விடுவோம்' ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைத் தலைவர்

**(மட்டக்களப்பு விஷேட நிருபர்)**

பிரிந்து நின்றால் அத்தனை அம்சங்களையும் இழந்து விடுவோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டுமென ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைத் தலைவர் சின்னத்தம்பி சர்வானந்தன் வலியுறுத்தினார்.

ஏறாவூர் ஐயன்கேணி கிராமத்தில் "கிறிசலிஸ்" தன்னார்வ நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற சக, சமூகங்களுடனான கலாசார நிகழ்வொன்றில் அவர் உரையாற்றினார்.

பாரதிபுரம் சனசமூக நிலயத்தில் அதன் தலைவர் எஸ். கமல் தலைமையில் நேற்று (31) இந்நிகழ்வு இடம்பெற்றது.



கலாசார நிகழ்வுகளில் பங்குற்றிய சிறார்களுக்கு பயன்தரும் மரங்கள்,பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்து மேலும் உரையாற்றிய பிரதேச சபைத் தலைவர் சர்வானந்தன் தெரிவித்ததாவது,

யுத்தத்திலும், அதன் பின்னரும் நாம் தொடர்ந்து கஷ்டங்களையே அனுபவித்து வருகிறோம்.எனினும்,சிலர் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர். எனவே இந்த நிலைமையில் நாம் பிரிந்து விடாமல் ஒற்றுமையாகச் செயற்பட்டு கிராமம், நகரம், நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். பழம்பெரும் ஐயன்கேணிக் கிராமத்தை வளப்படுத்துவதற்கு நாம் பிரிந்து விடாமல் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்றார்.

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கண்சத்திர சிகிச்சை உபகரணங்கள் அன்பளிப்பு

**(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)**



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண்சத்திர சிகிச்சைப் பிரிவின் வசதியை மேம்படுத்தும் நோக்கில் பத்து மில்லியன் ரூபா பெறுமதியான அதி நவீன கண் சத்திரசிகிச்கை உபகரணங்கள் நேற்று முன்தினம்(30) வழங்கி வைக்கப்பட்டன.

சமமாந்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு தலைவர் வைத்தியர் ஏ. இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண் சத்திரசிகிச்கை உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எம்.எம். றிபாஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அப்துல் வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம். ஹனீபா, சம்மாந்துறை முச்சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், வைத்தியர்கள், உலமாக்கள், பொதுமக்கள் உட்பட பலர் சலந்து கொண்டனர்.

சம்மாந்துறை பொதுமக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஷ் அஷ்ஷீரா மற்றும் உலமா சபைகளின் வழிகாட்டலில் பொதுமக்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சுமார் 10 மில்லியன் ரூபாய் நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சை உபகரணங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விவகாரத்துக்கோரிய மனைவியை கடத்திச்சென்ற கணவன்,பெற்றோர் கைது

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

விவாகரத்துகோரிய மனைவியை முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்ற கணவர் மற்றும் அவரது பெற்றோரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் வெள்ளிக்கிழமை (29) உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரம் பிரசேத்தில், இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரம் பிரசேத்தில் வசித்த பெண், அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரை கடந்த 6 மாதத்திற்கு முன்னர் திருமணம் செய்துள்ளார். இந்நிலையில் கணவன் மனைவிக்கிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, குறித்த பெண் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கணவனைவிட்டு பிரிந்து சென்று தனது பெற்றோருடன் வாழ்ந்தார். இந்நிலையில் கணவனிடம் விவாகரத்து கோரி நீதிமன்றில் அப்பெண் வழக்கும் தாக்கல் செய்திருந்தார்.

சம்பவதினமான வெள்ளிக்கிழமை (29) காலையில் குறித்த பெண்ணின் வீட்டை கணவர், அவரது பெற்றோர் உட்பட 3 பேர் முச்சக்கரவண்டியில் சென்று முற்றுகையிட்டுள்ளனர். இதன்போது, அங்கிருந்த மனைவியின் தாயார் மற்றும் அவரது இரு சகோதரிகளை தாக்கிவிட்டு மனைவியை கடத்தி சென்று கணவன் தனது வீட்டின் அறையில் பூட்டிவைத்துள்ளார்.

இந்த தாக்குதலில் பெண்ணின் தாயார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்தோடு, 119 பொலிஸ் அவசர சேவைக்கு தனது சகோதரியை கடத்தி சென்றுள்ளதாக முறைப்பாப்பாடு செய்யப்பட்டது.மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கடத்திச் சென்ற பெண்ணை மீட்டதுடன், கடத்தலில் ஈடுபட்ட பெண்ணின் கணவர் அவரது பெற்றோர் உட்பட மூன்று பேரை கைது செய்தனர்.

கைதானவர்கள், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# கேள்வியை இரத்துச் செய்தல்

**TENDER FOR SALE OF 01 No. 60 TON CAPACITY FLOATING CRANE GIRAFFE**

**TENDER No.: EW/04/PT/2021/MA//26-1**

மேலே குறிப்பிட்டுள்ள தலையங்கத்தின் கீழ் 2022 ஜூலை 22 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக ஏற்பட்டுள்ள எந்தவொரு அசௌகரியத்திற்கும் நாம் வருந்துகின்றோம்.

**பிரதான பொறியியலாளர் (பொறிமுறை வேலைகள்),**
**பொறிமுறை வேலைகள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**
**தொலைபேசி: 011-2482905, 011-2451906**
**தொலைநகல் இல.: 011-2451906**



Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.



# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண சபை

## தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் அடிப்படை சுகாதார சேவைகள் தொகுதியை வலுவூட்டல் செயற்றிட்டம் – (PSSP)

காலி, தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் கீழ்க்காணப்படும் வேலைத்திட்டங்களிற்காக 2022.08.01 முதல் 2022.08.30 அன்று மு.ப. 10.00 வரை முத்திரைக்குறி இடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் 2022.08.30 அன்று மு.ப. 10.30 இற்கு தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுத் திறக்கப்படும்.

| தொ. இல. | விபரம் | தேவையான பதிவு | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணையம் | மீளளிக்கப் படாத விலைமனு வைப்புத் தொகை ரூ. | விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 01 | தெனிபிட்டிய ஆதார மருத்துவ மனையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்கைப் பிரிவு மற்றும் வி. | C7 | 20,000.00 | 1500.00 | தென்மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் |
| 02 | ஊரகஹ பிராந்திய மருத்துவ மனையின் பல் சிகிச்சை அலகை நிர்மாணித்தல் மற்றும் ஆய்வு கூடத்தைப் புதுப்பித்தல் | C7 | 20,000.00 | 1500.00 | தென்மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் |

02. 2022.08.26 அன்று பி.ப. 3.00 வரை தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தேவையான பதிவைப் பூரணப்படுத்தும் இலங்கை நிர்மாணத்துறைப் பயிற்சி மற்றும் பயிற்சி மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள மற்றும் தென் மாகாண சபையில் பதிவு செய்யப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.
03. விலைமனுப்படிவங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளிற்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு. 091-2231620, 091-2224609, 091-2223839.
04. விலைமனுக்களை அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி தனித்தனி உறைகளில் சேர்த்து அவற்றை ஒருறையில் சேர்த்து கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரயாக அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றுள்ள பிரதிநிதி ஒருவர் சமுகமளித்திருக்குமாறு வேண்டப்படுகின்றனர். பூரணப்படுத்தப்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலை மனுப்பிணைத் தொகையும் அரசுடைமையாக்கப்படும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விலைமனுதாரர்களினதும் பிணைத் தொகை அரசுடைமையாக்கப்படும்.
05. மேற்படி கைத்தொழில்களிற்கான விலைமனுப்பிணைத் தொகையை தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் காசாகச் செலுத்தி, அல்லது அரச பெறுகை செய்முறை கையோடு 5:3:13 மாதிரியின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட குறித்த பெறுமானத்திற்கான பிணையமொன்று தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். காசாகச் சமர்ப்பிப்பதாயின் பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையத்தின் செல்லுபடிக்கலாம். 2022.08.30 முதல் 2022.11.30 வரையாகுதல் வேண்டும்.
06. விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் 03 மாதங்களாகும்.
07. அனைத்து விலைமனுக்களிலும் அலகு ஒன்றின் விலை மற்றும் மொத்த தொகையைக் குறிப்பிடும் நிரல் மற்றும் சாராம்சம் (கழிவு குறிப்பிடப்படும் நிரல் உட்பட) நிறமற்ற (transparent) செலோடேப் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
08. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானம் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**தென்மாகாண சுகாதார சேவைகள்**
**பணிப்பாளர் திணைக்களம்,**
**இல. 15ஏ, பஹல டிக்சன் வீதி, காலி.**
2022.08.01



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு

## அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம

## Sonial Vision பிரிவிற்கு மின்சாரத்தை வழங்குதல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் Sonial Vision பிரிவிற்கு மின்சாரத்தை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரின் சார்பில் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுத் தேவைப்பாடு
  விசேடத்துவம் - மின்சாரம் மற்றும் இயந்திரவியல்
  தரம் - EM-04 அல்லது அதற்கு மேல்

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-08-01ஆம் திகதி முதல் 2022-08-21ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1000.00 ரூபாவை செலுத்தி மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்களை 2022-08-22ஆம் திகதி மு.ப. 10.00 (நேரம்/திகதி) மணிக்கு முன்னர் பின்வரும் முகவரியிலுள்ள மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

சகல விலைமனுக்களுடனும் 59,497.50 ரூபா விலைமனுப்பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனு முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

விலைமனு முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு விலைமனு பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது

**பணிப்பாளர்,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

**தொலைபேசி: 011-2844450**



இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

நெடுஞ்சாலைகள் அமைச்சு

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழே விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | இடைநிகழ்வுகள் மற்றும் பெசேவ நீங்கலாக பொறியியலாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | விலை மனுப் பிணை (ரூபாவில்) | CIDA பதிவுத் தரம் | நிர்மாணக் காலம் (மாதங்கள்) |
|---|---|---|---|---|---|
| SMR/RBP/RDA/SBP/KGL/27 | ஒற்றை செல்லுடன் (single cell) கொடகொபுர பாலத்தின் மீள்நிர்மாணம் | 6.42 | 50,000.00 | சி7/சி-6 | 07 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படுவதுடன் 04/2016 (II) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிருணயிக்கப்பட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை பிரயோகப்படுத்தப்படும்.
2. நீங்கள் மேலதிக தகவலை இரத்தினபுரி, பண்டாரநாயக்க மாவத்தை, 04 ஆம் இலக்கத்திலுள்ள வீஅச இன் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி இல.: 045-2222608)
3. 2022.08.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கேகாலை பிரதான பொறியியலாளரின் அலுவலகமான அம்பன்பிட்டியவில் விலைமனுக் கூட்டமானது நடைபெறுவதற்கு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதுடன் அதே நாளில் தள விஜயமும் ஒழுங்குபடுத்தப்படும்.
4. ஒவ்வொரு ஒப்பந்தத்தின் பெறுமதியானது 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் கீழ் தனித்தனியாக பதிவு செய்வது விலைமனுதாரர்களுக்கு கட்டாயமானதாகும்.
5. 2022.08.02 ஆம் திகதியிலிருந்து 2022.08.16 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் பெசேவ நீங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், இரத்தினபுரி, பண்டாரநாயக்க மாவத்தை, 04 ஆம் இலக்கத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை மாகாணப் பணிப்பாளருக்கு (SBP) எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் **ICTAD** புத்தகத்தையும் இணைத்து சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள் தனித்தனியான தபாலுறைகளில், இரு பிரதிகளில், அவற்றின் இடது பக்க மேல் மூலையில் பெயரைக் குறிப்பிட்டு 2022.08.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக 'தலைவர், மாகாண பெறுகைக் குழு (SBP), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இரத்தினபுரி' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2022.11.15 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2022.12.13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண பெறுகைக் குழு (SAB),**
**மாகாண பணிப்பாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இரத்தினபுரி.**


# நாமல் உயனவில் 50 வருடங்கள் வாழ்ந்த யானை திடீர் உயிரிழப்பு

## ராகுல தேரர் தலைமையில் மரணச் சடங்கு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நாமல் உயன மற்றும் கலாவெவ வனப்பகுதியில் 50 வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வந்த யானையின் மரணம் தொடர்பில் விரிவான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என நாமல் உயன நிறுவனர் வனவாசி ராகுல தேரர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாமல் உயன வனப்புக்கு முன்னால் இறந்த நிலையில் "பரானா ' என்ற யானையின் உடல் பிரதேசவாசிகளினால் கடந்த (26) கண்டெடுக்கப்பட்டு கல்கிரியாகம வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

" பரானா " என்ற '' குறித்த யானையின் உடற் பாகங்களில் எரிகாயங்கள் இருப்பதாகவும் சிலர் இந்த யானையின் வாழ்க்கையை சீரழித்துள்ளதாகவும் பிரதேச வாசிகள் சந்தேகிக்கின்றனர்

இது தொடர்பில் நாமல் உயன வனவாசி ராகுல தேரர் தெரிவிக்கையில்; அந்த யானையினால் எவருக்கும் எந்தப்பிரச்சினைகளும் இருக்கவில்லை. குறித்த யானை மற்றுமிரு யானைகளுடன் அப்பிரதேசத்தில் தொடர்ந்து சுற்றிதிரிந்ததாகவும் தெரிவித்தார்.

சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி உயிரிழந்துள்ள யானையின் சமய சடங்குகள் நாமல் உயன நிறுவனர் வனவாசி ராகுல தேரரின் தலைமையில் கடந்த (27) இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.


அධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

+9411-2697721/+9411-2691378
+9411-2674768
info@mohe.gov.lk www.mohe.gov.lk

18, වෝඩ්පෙදෙස, කොළඹ 07.
18, வோட் பிளேஸ், கொழும்பு07.
18, Ward Place, Colombo 07.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 25அ அத்தியாயத்தின் கீழ் உயர்கல்விக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், அச்சட்டத்தின் 70ஆ அத்தியாயத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள நிலையான அதிகாரியினால் வழங்கப்படும் அறிக்கையைக் கவனத்திற் கொண்டு 2022-07-31ஆம் திகதி வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பட்டதாரி கற்கைநெறி பட்டியல் www.mohe.gov.lk எனும் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மேலும் 2022-07-31ஆம் திகதி வரை உயர்கல்விக்குப் பொறுப்பான அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கற்கைநெறி தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய விசேட வர்த்தமானி அறிவித்தலை பின்வரும் படிநிலைகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

www.mohe.gov.lk → Universities & Institutes → Other Recognized Institutes & Degree → Recognized Degree


மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற

# டீசல் கூடுதல் விலைக்கு விற்பனை; ஒருவர் கைது

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**


ஹம்பாந்தோட்டை மீன்பிடி படகு உரிமையாளர்களுக்கு துறைமுகத்தினால் விநியோகிக்கப்பட்டு வரும் டீசல் தொகையினை பெற்று அதனை கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை ஹம்பாந்தோட்டைபொலிஸார் (30) கைது செய்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுக எரிபொருள் நிரப்பு நிலையததிலிருந்து மீனவர்களுக்காக வழங்கப்பட்டு வரும் டீசல் மீனவர்களினால் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 2000 லீற்றர் டீசல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஒருசில மீனவர்கள் தங்களுக்கு தொழிலில் ஈடுபடுவதற்காக வழங்கப்படும் டீசலினை மறைத்து சேமித்து வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிலாபத்தில் ஆடி அமாவாசை விரதம்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

இந்து சமயத்தின் முக்கிய விரதங்களில் ஒன்றான ஆடி அமாவாசை விரதம் கடந்த வியாழக்கிழமை (28) இந்து மக்களினால் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் சிலாபம் தெதுறு ஓயா (மாயவானாறு) கடற்கரையோரத்தில் முன்னேஸ்வரம் ஆலயகுரு சிவஸ்ரீ ராமலிங்க ஐயர் முரளிதரக் குருக்கள் பிதிர்க் கடனை நடாத்தினார்.

புத்தளம் கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களை சேர்ந்த தந்தையை இழந்தவர்கள் இங்கு வருகை தந்து மாயவானாற்றில் குளித்து (தீர்த்தமாடி) பிதிர் கடனை செலுத்தினர்.

# குழு மோதல்; கூரிய ஆயுதத்தினால் ஒருவர் வெட்டிக் கொலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது கூரிய ஆயுதமொன்றினால் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக எப்பாவல பியங்கரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியங்கரகம பொகுனுகம பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 25 வயதுடையயாய 07,பொகுனுகம பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சைக்காக எப்பாவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஜனாதிபதி ரணில் தலைமையிலான அமைச்சரவையில்

# தென் மாகாணத்திற்கு 04 அமைச்சுப் பதவிகள்

**வெலிகம தினகரன் நிருபர்**

புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அமைச்சரவையில் தென் மாகாணத்துக்கு 4 அமைச்சுப் பதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ் பதிரன பெருந்தோட்டதுறை அபிவிருத்தி அமைச்சராகவும் மனுஷ நாணயக்கார வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அமைச்சராகவும் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஞ்சன விஜயசேகர வலுசக்தி மற்றும் மின்சாரத் துறை அமைச்சராகவும் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர விவசாயத்துறை மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர்.

சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன சபாநாயகராக பதவி வகித்து வருகின்றார்.

மேலும் ஜனாதிபதி பதவியேற்பைத் தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு காலி மாவட்டத்தைசேர்ந்த வஜிர அபேவர்தனவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்

# 94 வீதமான விவசாயிகளுக்கு யூரியா உரம் விநியோகம் பூர்த்தி

### மாவட்ட செயலாளர் சுமனசேகர தெரிவிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரும்போக விவசாயத்திற்கு தேவையான உரத்தேவையில் 94 வீதமான யூரியா உரத்தினை தற்போது விவசாயிகளுக்கு வழங்கியுள்ளதாக மாவட்ட செயலாளர் எச்.ஏ. சுமனசேகர (31) தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக 20,95800 மெற்றிக் தொன் யூரியா உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெரும் போகத்தில் இம்மாவட்டத்தின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கி 32000 ஏக்கருக்கும் கூடுதலான வயல்கள் தற்பொழுது நெற் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இவ் வயல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதமளவில் அறுவடை செய்யப்படவுள்ளது.

அத்தோடு விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளினையும் திட்டமிட்ட அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வாழை செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் இம் முறை யூரியா உரத்தினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# கொள்வனவு அறிவித்தல்

**மன்னார் II ஆம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள வளிமின்னுற்பத்திக்காக ''மீள்குடியேற்ற கொள்கை சட்டகமைப்பு மற்றும் மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்ட தயாரிப்பிற்காக உசாத்துணை நிறுவனமொன்றை தெரிவு செய்தல்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

**கொள்வனவு இல.: SEA/PD/RND/28-2022**

**பின்புலம் மற்றும் பணியின் நோக்கம்:**

இலங்கை நிலைபெறுதகு சக்தியினால் அமுல்நடாத்தப்படும் உத்தேசிக்கப்பட்டுள்ள மன்னார் தீவின் மன்னார் 11 ஆம் கட்ட வளிமின்னுற்பத்தி செயற்றிட்டத்திற்காக மீள்குடியேற்ற கொள்கை கட்டமைப்பு மற்றும் மீள்குடியேற்றசெயற்பாட்டு திட்டத்திற்கான(மீசெதி) முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக இலங்கை நிலைபெறுதகு அதிகாரசபையானது ஆர்வமுள்ள உள்ளூர் கம்பனிகளைஅழைக்கின்றது.

இந்த உசாத்துணை சேவையின் நோக்கமானது செயற்றிட்டத்தின் முக்கியமான சமூகதாக்கங்களை இனங்காண்பதற்காக விரிவான மதிப்பீடொன்றை நடாத்துவதுடன் மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டமொன்றை தயாரித்து,விரிவான மதிப்பீடு மற்றும் தரமான தரவு சேகரிப்பொன்றை பொறுப்பேற்றபின்னர் இச்செயற்றிட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு மீள்குடியேற்ற தாக்கங்கள் தொடர்பாக விளக்குவதாகும். மீசெதி ஆனது செயற்றிட்டத்தின் மீள்குடியேற்ற கொள்கை சட்டகமைப்பில் (மீகொச) கோடிட்டுகாட்டப்பட்டுள்ள அடிப்படையில் உத்தேசிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தினால் பாதிக்கப்படும் சாரார்களின் (செதாசா) விருப்பமில்லாத மீள்குடியேற்றத்தினால் ஏற்படும் செயற்றிட்டம் தொடர்பான பாதகமான சமூக-பொருளாதாரம் தொடர்பான தாக்கங்களை தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்காக தேவைப்படும் நடவடிக்கைகளை குறிப்பிடுவதாகும். இந்த நடவடிக்கையானது இச்செயற்றிட்டத்தின் அமுலாக்கத்திற்கு முன்பிருந்த மட்டங்களிலும் சிறந்தவகையில் வாழ்க்கை நிலபரங்கள் மற்றும் சமூக சூழலையும் மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்கு முன்பிருந்த மட்டங்களிலும் சிறந்த வாழ்க்கை நிலபரங்கள் மற்றும் செயற்றிட்டத்தினால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு இழப்பீடு மற்றும் ஏனைய மீள்குடியேற்ற மற்றும் புணர்நிர்மாண உதவி மற்றும் நன்மைகளை வழங்கல் அடங்கலாக பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளையும் பரிந்துரைக்கும்.

இந்த குறிப்பிட்ட பணிஒதுக்கீடானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடக்கும்.

- அ) செயற்றிட்டத்தினால் பாதிக்கப்படும் பிரதேசங்களை அடையாளம் காணல்.
- ஆ) செயற்றிட்டத்தினால் பாதிக்கப்படும் நபர்கள்/ குடும்பங்கள்/ அமைப்புக்களின் கணக்கெடுத்தல்.
- இ) இழப்புக்களின் விபரங்களை தயாரித்தல்.
- ஈ) செயற்றிட்டத்தினால் பாதிக்கப்படும் பிரதேசங்களில் சமூக-பொருளாதார ஆய்வுகளை நடாத்தல்.
- உ) ஏழ்மை மற்றும் பாதிப்பு மதிப்பீடுகள்
- ஊ) பெண்கள் மற்றும் பாதிக்கப்படும் குழுமங்களுடனான அர்ப்பணிக்கப்பட்ட ஆலோசனைகள் அடங்கலாக பங்காளர் பகுப்பாய்வு மற்றும் பங்காளர் ஆலோசனைகள்.
- எ) இறுதி EIA அறிக்கையை தயாரிப்பதற்காக மீள்குடியேற்ற கொள்கை சட்டகமைப்பு மற்றும் மீசெதி ஆகியவற்றின் சமூகவியல் அம்சங்களை இணைத்துக் கொள்ளல்.

**விலைமனுக்கோரல் செயற்பாட்டின் அறிவித்தல்:**

1. கொள்வனவு வழிகாட்டிகள் - 2006 இற்கு அமைவாக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் இப்பணி ஒதுக்கீட்டின் மேலதிக விபரங்கள் ''ஆர்எப்பி ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன என்பதுடன் அவற்றை பின்வரும் வழி மூலம் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் http://www.energy.gov.lk/index.php/en/procurement என்ற இணையதளத்தில் பார்வையிடலாம் / பதிவிறக்கம் செய்யலாம்.
2. தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்க ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு பிரிவின் கீழுள்ள ''www.energy.gov.lk'' என்ற இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து ''ஆர்எப்பி'' ஆவணத்தை கொள்வனவு செய்யலாம். 1,000 ரூபா இலங்கை பணத்தை ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் பொதுவான கணக்கிற்கு செலுத்தப்படுவதுடன் நிறுவனத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். பணவைப்புத் துண்டு/ இ பற்றுச்சீட்டானது procurement.slsea@gmail.com மற்றும் slsefinance@gmail.com என்ற மின்னஞ்சல்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. பணி தொடர்பான சிறந்த விளக்கத்தை வளமுள்ள விலைமனுதாரர் பெறுவதற்காக 2022.08.09 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று ஒன்லையின் வழியாக நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் இணைவதற்கு விருப்பமுள்ள விலைமனுதாரர்கள் மின்னஞ்சலொன்றை procurement.slse@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி கூட்டத்திற்கான தொடர்பை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
4. தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதியிடல் முன்மொழிவு ஆகியன தனித்தனியாக முத்திரையிடப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "Preparation of Resettlement Policy Framework and Resettlement Action Plan for the proposed Mannar Phase- II Wind Power Project" என குறிப்பிடப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட தபாலுறையானது கொள்வனவு பிரிவு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரியை வந்தடையும் வகையில் 2022.08.29 ஆம் திகதியன்று மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுக்கள் அவைகளின் மூடும் திகதி மற்றும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, 72 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் சபை அறையில் திறக்கப்படும்.
6. மேலதிக விபரங்களை 0112575203/ 0112575030/ 0112575036 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக அலுவலக நேரங்களில் மற்றும் procurement.slsea@gmail.com என்ற வழியாகவும் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் கொள்வனவுப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**கணக்கு விபரங்கள் பின்வருமாறு:**

வங்கி : இலங்கை வங்கி.
கிளை : 453 - டொரிங்டன் சதுக்கம்
கணக்கு இல. : 0074944408

**அமைச்சு உசாத்துணையாளர்கள் கொள்வனவுக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07.**
**2022.08.01.** ***மூடும் திகதி மற்றும் நேரம்: 2022.08.29 அன்று மு.ப. 10.30 மணிக்கு.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## திருத்த அறிவித்தல்

2022 ஜூலை 28 மற்றும் 29ம் திகதிகளில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த 2022.08.18ம் திகதி திறக்கப்படவிருந்த கீழ்க் காணும் கேள்வி இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் திருத்தப்படுகின்றது.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | குறிக்கப்பட்டவாறு விலைமனுப் பிணை | புதிய விலைமனுப் பிணை | குறிக்கப்பட்டவாறு ஆவணக் கட்டணம் | புதிய ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/04/021 | READYMIXED CONCRETE | 80,000.00 | 300,000.00 | 1000.00 | 3500.00 |

ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி காணப்படும்.

**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லெயிடன் பெஸ்தியன் வீதி, கொழும்பு -01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482832, 2482409**
**பெக்ஸ் இலக்கங்கள்: 2381652, 2470443**

## கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

### ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

**திருத்த அறிவிப்பு - இறுதி திகதி நீட்டிப்பு**

**(பிற்சேர்க்கை - 04)**

கொழும்பு 10, இல-320, டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் காணப்படும் கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரியினால் 2022.06.12 ஆம் திகதியன்று குத்தகைக்கு அல்லது இருக்கும் இடத்தை வாடகைக்கு எடுப்பதற்காக ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அறிவிப்பை வெளியிடப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட ஏல அறிவிப்பில் பின்வரும் திருத்தம் (பிற்சேர்க்கை - 04) பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

**ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான இறுதித் திகதி 2022.08.31 ஆம் திகதி மு.ப.10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,
**கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**
இல. 320, ஏ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு-02, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள ஒரு பகுதிக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாதிரி வீடமைப்புக் கட்டிடம் (Show Flat) எனும் இடப்பரப்பை உணவகமொன்றாக வாடகை அடிப்படையில் நடாத்திக் கொண்டு செல்லும் பொருட்டான செயற்பாட்டாளரைத் தெரிவு செய்வதற்காக விலைமனுக் கோரல்**

01. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு-02, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள ஒரு பகுதிக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாதிரி வீடமைப்புக் கட்டிடம் (Show Flat) எனும் இடப்பரப்பை 05 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் உணவகமொன்றாக அபிவிருத்தி செய்து பராமரித்து நடாத்திக் கொண்டு செல்லும் பொருட்டான செயற்பாட்டாளரைத் தெரிவு செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மேற்படி இடப்பரப்பை பயன்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த அடிப்படை மாதாந்த வாடகை மற்றும் பிணை முறி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

    கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மாதாந்த வாடகையை விட மேலாகக் கிடைக்கும் அதிகூடிய மாதாந்த வாடகை பெறுமதியின் பிரகாரம் செயற்பாட்டாளர் தெரிவு செய்யப்படுவார்.

| விபரங்கள் | அடிப்படை மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி (ரூபா) |
|---|---|---|
| காணித்துண்டின் விபரங்கள்<br>இல. 2229<br>திகதி: 2012-03-27<br>துண்டு இலக்கம்: 1 மற்றும் 2<br>காணிப் பரப்பளவு: 40 பேர்ச்<br>கட்டிடம்: 2 மாடிகளைக் கொண்ட மாதிரி வீடமைப்புக் கட்டிடம் | ரூபா 350,000.00 + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரிகள் | 210,000.00 |

02. இதில் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இயைபுடைய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா தொகை மற்றும் அதற்கு இயைபான அரச வரிகள் சகிதம் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' முதலாம் படிநிலை கட்டிடம், 7வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து 2022 ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதியிலிருந்து 2022 ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். உத்தேச விண்ணப்பதாரர்கள் இந்தக் காலப்பகுதியில் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' முதலாம் படிநிலை கட்டிடம், 7வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் இயைபுடைய கேள்விப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. விலைகளைச் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரரினால் பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது மேற்குறிப்பிடப்பட்ட 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 210,000.00 ரூபா பெறுமதியான தொகையை இந்த அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை (வாடிக்கையாளர் பிரதியை) விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். பொருத்தமான செயற்பாட்டாளரை தெரிவு செய்ததன் பின் வெற்றிகரமான கேள்விதாரர் உட்பட விண்ணப்பதாரர்களுக்கு விடுவிக்கப்படும். மற்றும் அவரால் உரிய வகையில் பணம் செலுத்தியதன் பின் அந்த விண்ணப்பதாரர்களால் வைப்புச் செய்யப்பட்ட பிணைத் தொகை எவ்வித வட்டியும் இன்றி அவர்களுக்கு விடுவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டாளரால் 06 மாத வாடகைக்குச் சமமான தொகையை குத்தகைக் காலத்தின் இறுதியில் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக அதிகார சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2022 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். விலைமனுக்கள் அனுப்பவேண்டிய முறை கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த உடனடுத்து பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', முதலாம் படிநிலை, 6ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கும் குழுவினால் விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
06. உத்தேச விண்ணப்பதாரர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் வேறு எவ்வித மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
07. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, 'செத்சிறிபாய', முதலாம் படிநிலை, 6வது மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பிரதான அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம்: 0113357363, 0112875916 - 20 நீடிப்பு 2935

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6 மற்றும் 7வது மாடிகள்,**
**''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்ல.**

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை – 2022

இப் பரீட்சைக்காக நிகழ்நிலை (Online) முறைமையில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (https://donets.lk) அல்லது நிகழ்நிலை பரீட்சை வலைத்தளத்தில் (https://onlineexams.gov.lk/eic) அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் செல்லிடத் தொலைபேசி செயலிக்குள் ('DoE' Mobile app) நுழைவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்க முடியும்.

இப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றவுள்ளவர்களின் விண்ணப்பங்கள் 2022 ஓகஸ்ட் 01ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 19 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக்கொண்டு மேற்படி வலைத்தளத்தினுள் நுழைந்து நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த நகரத்தையும் பாடங்களையும் குறிப்பிடும் போது சரியாகக் குறிப்பிட வேண்டுமென்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஒரு பரீட்சார்த்திக்கு ஆகக்கூடியது பிரதான பாடங்களில் 03 பாடங்களுக்கு மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும். அதற்கு மேலதிகமாக அவசியமேற்படுமிடத்து பாட இலக்கம் 12 - பொதுச் சாதாரண பரீட்சைக்கும், பாட இலக்கம் 13 - பொது ஆங்கிலம் பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

**பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் போது இரண்டு பிரதான படிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.**

**1வது படிமுறை** - விவரங்களை உள்ளடக்கி ‘குறிப்பு இலக்கத்தை’ (Reference number) பெற்றுக்கொள்ளல் உங்களது தனிப்பட்ட விவரங்களையும் பரீட்சை தொடர்பான விவரங்களையும் பாடங்கள் தொடர்பான விவரங்களையும் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான விவரங்களையும் உள்ளடக்குக. நீங்கள் அஞ்சல் அலுவலகம் மூலம் கொடுப்பனவு செய்யின் குறிப்பு இலக்கம் (Reference number) ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2வது படிமுறை** - பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ‘குறிப்பு இலக்கத்தை’ (Reference number) அஞ்சல் அலுவலகத்தில் வழங்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) உள்ள இணைப்பை (link) செயற்படுத்தியோ அல்லது மீண்டும் வலைத்தளத்தில் நுழைந்தோ உங்களுக்கு கிடைக்கப்பெறும் "Download AL 2022 Application" ஐ தெரிவு செய்து (Click) உங்களது விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். நீங்கள் வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்துவதாயின் அது சரியாக நிறைவுற்ற பின்னர் மேலேயுள்ள (icon) ஐ பயன்படுத்தி விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**பரீட்சைக் கட்டணத்தை அஞ்சல் அலுவலகம் மூலம் அல்லது எந்தவொரு வங்கி அட்டைகள் மூலமாகவும் செலுத்த முடியும்.**

**02. விண்ணப்பப்படிவம்**

**அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதனை அச்சுப்பிரதியெடுத்துக் கொள்ளவும். அச்சுப் பிரதியை தங்கள் பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து அதனை சமர்ப்பிப்பதற்கு தயாராகவும் இருத்தல் வேண்டும்.**

**அரச பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பிக்குமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்து செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

**2.1 முறைமைக்குள் பிரவேசித்தல் - 1வது படிமுறை**

(i) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து ‘எமது சேவை’ என்பதின் கீழுள்ள ‘நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)’ ஐ Click செய்க. அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (Mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து ‘நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)’ஐ Click செய்க. அல்லது
- https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

(ii) "G.C.E. AL - 2022 Application for student Registration" (Private) எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

(iii) உங்களின் தனிப்பட்ட தகவல்கள், தோற்றவுள்ள நகரம், மொழிமூலம் என்பவற்றை தெரிவு செய்த பின்னர் தோற்றவுள்ள பாடங்களை தெரிவு செய்து உள்ளடக்க முடியும்.

(iv) (அ) **(13) பொது ஆங்கிலம்:**

மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கு மேலதிகமாக பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். இப்பாட பெறுபேறு பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது. இப் பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த. (உ.தரப் பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடப்படும்.

(ஆ) **(12) பொதுச் சாதாரண பரீட்சை:**

எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெற எதிர்பார்த்திருப்பின் கட்டாயமாக குறைந்தது 30 புள்ளிகளைப் பெறல் வேண்டும். இதற்கு முன்னர் (உ.தரப்) பரீட்சைக்குத் தோற்றி அவர் 30 புள்ளிகளுக்கு அதிகம் பெற்றிருப்பாராயின் மீண்டும் தோற்ற வேண்டிய அவசியமில்லை.

(இ) **செய்முறைப் பரீட்சையுடன் கூடிய பாடங்கள்**

பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்க ளுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இவ்விரு வகைப் பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் இப்பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும். செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதியில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். உரிய தினத்தில் தோற்றத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் செய்முறைப் பரீட்சை முழுமையாக நிறைவுற்ற பின்னர் மீண்டும் ஒருமுறை செய்முறைப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது.

(ஈ) கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26 ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் ‘குறித்த பாடத்துறைகளில் எதிலும் அடங்காத’ (Non stream) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் ‘நாடளாவிய தரம் (Island Rank) மற்றும்’ மாவட்ட தரம் (District Rank) வெளியிடப்படமாட்டாது. அச்சுற்று நிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்க வேண்டியேற்படும் பிரச்சினைகள் தொடர்பான எந்த பொறுப்புக்களையும் இத்திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2 2022.08.19 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பிக்க முடியாது.

2.3 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப முடியும். தகவல்களை மாற்றி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் சந்தர்ப்பத்தில் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் தண்டணைக்குள்ளாவார்.

**03. பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் - 2வது படிமுறை**

பரீட்சைக் கட்டணம் அஞ்சல் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

3.1 அஞ்சல் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் "Payment method” இன் கீழுள்ள "Pay by postal Department" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. உங்களுக்கு அங்கு கிடைக்கப்பெறும் ‘குறிப்பு இலக்கத்தை’ (Reference number) தபால் அலுவலகத்தில் வழங்கிய உரிய தொகையை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். பணத்தை செலுத்திய பின்னர் பரீட்சைத் திணைக்கள உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்ய முடியும்.

**கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள இணைப்பை (Link) செயற்படுத்துவதன் மூலம் உரிய விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.**

3.2 வங்கி அட்டைகள் (Credit / Debit card) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit/ debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாட எண்ணிக்கை** | 1 | 2 | 3 | 4 | 5 |
| **கட்டணம் (ரூபா)** | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

04. உங்கள் விண்ணப்பத்திலுள்ள தகவல்களுக்கு அமைய பரீட்சை அனுமதிப்பத்திரம் உங்களுக்கு கிடைக்கப்பெறும். பரீட்சை அனுமதி அட்டையில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பின் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்னர் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தினுள் நுழைந்து (07) நாட்களுக்குள் உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

05. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு கிடைக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்திற்குமிடையே வேறுபாடுகள் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் உங்களுக்கு அனுமதிப்பத்திரம் கிடைத்தவுடன் உடனடியாக கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு கிளைக்கு தொடர்பு கொள்ள வேண்டும்.

06. **சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் தமது நிரந்தர வதிவிட முகவரியையும் தமது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்ற தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியையோ, தொலைபேசி இலக்கத்தையோ குறிப்பிடலாகாது**

07. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் எல்லா சந்தர்ப்பத்திலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு தாமதமின்றி சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

08. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும் / கட்டணம் அறவிடும் / அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் / அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

09. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் "Candidats with Special Education Needs" இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

**குறிப்பு:** இப்பரீட்சை தொடர்பாக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும்மாட்டாது.

**இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திற்கோ அல்லது ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கோ தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டுமே, பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (CAttempt) செல்லுபடியற்றதாகிவிடாது என்பதால் அதற்காக எந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் அவசியமற்றது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும். இது தொடர்பாக வைத்திய சான்றிதழ்களையோ கடிதங்களையோ திணைக்களத்திற்கு அனுப்புவது அவசியமற்றது.**

2021(2022) க.பொ.த. (உ.தரப்) பரீட்சைக்குத் தோற்றி இம்முறை பரீட்சைக்கு இரண்டாவது அல்லது மூன்றாவது தடவையாக தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு இப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011-2784208/011-2784537/ 011-2786616 தொலைநகல் இலக்கம் : 011 - 2784422

**தொடர்பு எண் : 6/3/AL/2022**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம் த.பெ.1503, கொழும்பு.**
2022.08.01

**எல்.எம்.டீ. தர்மசேன பரீட்சை**
**ஆணையாளர் நாயகம்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கல்வி அமைச்சு**

**றுஹுண பல்கலைக்கழகம்**

## றுஹு ண பல்கலைக்கழகத்தில் ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்த கேட்போர் கூடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வேலைகள்

**ஒப்பந்த இல.: RUH/REHAB/2022/04**

கீழே விபரிக்கப்பட்டவாறு றுஹுண பல்கலைக்கழகத்தில் ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்த கேட்போர் கூடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வேலைகளுக்காக மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | வேலைகள் | கட்டிட நிர்மாணத்தில் CIDA தரம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம்/ விலைமனு பிணை (ரூபாவில்) | பொறியிய லாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்த கால எல்லை (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | றுஹுண பல்கலைக்கழகத்தில் ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்த கேட்போர் கூடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வேலைகள் | சி-5 அல்லது சி-6 | 6,000.00 | 255,000.00 | பெசேவ நீங்கலாக 17 | 120 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. 2022 ஓகஸ்ட் 12 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.45 மணி வரையும் பல்கலைக்கழக சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 6,000 இலங்கை ரூபாவைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம், மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவி பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்து அவைகளிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
   விஷேடத்துவம் - கட்டிட நிர்மாணம்
   CIDA தரம் (முன்பு ICTAD தரம்) – சி-5 அல்லது சி-6
4. ஒப்பந்தக் கால எல்லையானது (நிர்மாணம்) ஆரம்பிக்கும் திகதியிலிருந்து 120 நாட்களாகும்.
5. மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பிரதான வேலைகளுக்கான உதவி பதிவாளரின் அலுவலகத்தில் மேலதிக தகவலை பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை நீங்கள் பரீட்சிக்கலாம் (041-2033260- நீடிப்பு:12045)
6. விலைமனுவானது 2022 நவம்பர் 14 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பிரதான சபை அறையில் (முன்னர் மூதவை அறை) 2022 ஓகஸ்ட் 08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
8. அனைத்து விலைமனுக்களும் இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் இலங்கை ரூபா (255,000 இலங்கை ரூபா மாத்திரம்) பெறுமதியானதும் றுஹுண பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியுடன் பதிவு பெற்ற இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வங்கி உத்தரவாத பாங்கில் அமைந்த ‘விலைமனுப்பிணையொன்றுடன்’ இருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது ‘இலகுவில் மாற்றக்கூடியதாகவும்’ ‘நிபந்தனையற்றதாகவும்’ விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்ட உருமாதிரியில் அமைந்ததாகவும் 2022 டிசம்பர் 12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலமைந்ததகாவுமிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மேலே குறிப்பிட்டுள்ள மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ‘தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன குறிக்கப்படல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடும் நேரத்திற்கு பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**2022 ஓகஸ்ட் 01 ஆம் திகதியன்று.**

# தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

# கேள்வி அழைப்பு

தேசிய கல்வி நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் இலங்கையில் தகைமையும் தகுதியுமுடைய கேள்வி தாரர்களிடமிருந்து தேசிய கல்வி நிறுவனத்தின் பதவிநிலை அலுவலர் விடுதிக்காக மரத் தளபாட உபகரணங்களை வழங்கிப் பொருத்தும் பெறுகை செயற்பாட்டிற்கு பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | கேள்வி கோவை இலக்கம் | வேலையின் பெயர் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணப் பெறுமதி | 2022.12.20 வரை செல்லுபடியாக வேண்டிய கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | NIE/LP/2022/03 | தேசிய கல்வி நிறுவனத்தின் பதவிநிலை அலுவலர் விடுதிக்காக மரத்தளபாட உபகரணங்களை வழங்கிப் பொருத்துதல் | ரூ. 3500.00 | ரூ. 132,400.00 |

1. தகைமையும் தகுதியுமுடைய கேள்விதாரர்களுக்கு கேள்வி கோரல் பத்திரங்களை (Tender Documents) இற்கான மீளளிக்கப்படாத வைப்பாக பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 607628 (இலங்கை வங்கி, மஹரகம) இற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு, வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று மற்றும் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டுதல் கடிதத்தை பெறுகை அதிகாரியிடம் சமர்ப்பித்து வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் அந்த நேரத்திற்குள் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்து பார்க்கமுடிவதுடன் குறித்த சகல விபரங்களையும் பெறுகை பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

   கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் 2022.08.22ம் திகதி பி.ப. 3.00 இற்கு முடிவுறும்.

2. இதற்காக குறித்த கேள்விக்கு முன்னராக கூட்டம் 2022.08.16ம் திகதி மு.ப. 10.00 இற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அலுவலகத்தில் நடைபெறும்.

3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் நகல் பிரதிகள் சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு வேறு வேறாக பொறியிடப்பட்ட 2 உறைகளில் இட்டு மீண்டும் அவ் உறைகள் 2ஐயும் பொறியிடப்பட்ட தனி உறையில் இட்டு இதன் இடது பக்க மூலையில் கேள்வி கோவை இலக்கத்தை குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2022.08.23ம் திகதி முடிவடைவதுடன் அக் கேள்விகள் 2022.08.23ம் திகதி பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு மஹரகம, ஹைலெவல் வீதி, தேசிய கல்வி நிறுவகத்தின் பெறுகை அதிகாரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பிரதிப்பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) பணியகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் நிராகரிக்கப்படும். அக் கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் உடனடியாக நிதித் திணைக்களத்தில் வருகை தந்துள்ள கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

5. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானம் ஆவதுடன் எந்தக் காரணமும் கூறாமலேயே எந்தக் கேள்வியையும் இரத்துச் செய்யும் உரிமை தேசிய கல்வி நிறுவனத்திற்கு உரியது

   இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 011 7601797, 011 7601799ஐ அழையுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**

2022.08.01

# 2023 வரவு-செலவுத் திட்டம் முன்மொழிவுகளைக் கோருதல்

## நீர்கொழும்பு மாநகர சபை

2023ஆம் வருடத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்வாங்குவதற்கு கவனத்திற் கொள்வதற்காக நீர்கொழும்பு அதிகாரப் பிரதேசத்தினுள் நிறைவேற்றப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு பிரஜைகளாகிய உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

- முன்மொழிவுக்கு இயைபான ஆதனம் நீர்கொழும்பு மாநகர அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள சபைக்குரித்தான ஆதனமாகவிருத்தல் வேண்டும்.
- ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கலாம்.
- ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்போது முன்னுரிமையின் பிரகாரம் வரிசைப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை 2022-08-31ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக கிடைக்கச் செய்யுமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

**நகரபிதா,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு**
**மின்னஞ்சல்:** nmcaccbk@gmail.com

# பெறுகை அறிவித்தல்

## 2022/2023 ஆண்டுகள் சார்பாக வைத்திய ஆராய்ச்சி நிலைய விலங்குணவு உற்பத்திப் பிரிவிற்கு புல் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன

2022.09.01 முதல் 2023.08.31 வரையான ஒரு வருட காலத்திற்கு வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் விலங்குணவு உற்பத்திப் பிரிவிற்கு ஒரு நாளைக்கு புல் 150 கி.கிராமும், ஒரு மாதத்திற்கு கிணிபீ வகை புல் 1000 கி.கிராமும் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.08.19ம் திகதி மு.ப. 10.00 வரை ஏற்கப்படும்.

2022.08.19 மு.ப. 10.00 வரை ரூ. 1000.00 மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையை நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு செலுத்தி கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் புல் வழங்குவதற்கான கேள்வி - 2022/2023 என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கணக்குப் பிரிவின் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

2022.08.22ம் திகதி மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். இவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இல. 011 2693532ஐ அழையுங்கள்.

**வைத்தியர் ஆர். வீ. குணசேக்கர,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வைத்திய ஆராய்ச்சி நிலையம்,**
**கொழும்பு -08.**

## தொல்லியல் பட்டப்பின் பட்டநிறுவகம்

# பெறுகை அறிவித்தல்

## தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகத்திற்கு துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார சுத்திகரித்தல் சேவைகளை வழங்கல்

பதிவு பெற்ற சேவை வழங்குநர்களிடமிருந்து தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகத்திற்கு துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார சுத்திகரித்தல் சேவைகளை வழங்குவதற்காக 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதி பி.ப. 3 மணி வரையும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார். அண்ணளவான ஆகுசெலவு மதிப்பீட்டுத் தொகையானது வருடத்திற்கு 2,000,000 இலங்கை ரூபாவாகும்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

2022 ஓகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து 2022 ஓகஸ்ட் 14 ஆம் திகதி வரையும் sarpgiar@kln.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புவதன் மூலமும் மீளளிக்கப்படாத கட்டணமான 2,000 ரூபாவை (இரண்டாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலமும் தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவக பொது நிருவாகத்திற்கான உதவி பதிவாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணக்கொடுப்பனவானது இலங்கை வங்கி டொரிங்டன் கிளையின் 6406077 என்ற தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவக கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படல் வேண்டும்.

விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 90 நாட்கள் கால எல்லைக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 2020.10.28 ஆம் திகதியிடப்பட்டதும் 5.3.11 என்ற பெறுகை வழிகாட்டி குறிப்பீட்டிற்கு 36 ஆம் அனுபந்தத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டதுள்ளதும் முகவராண்மையொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுமான 20,000 ரூபாவிற்கான (இருபதினாயிரம் ரூபா மாத்திரம்) மீளளிக்கப்படும் விலைமனு பிணையாக அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகத்திற்கு துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார சுத்திகரித்தல் சேவைகள்'' என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகம், இல. 407, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 407 ஆம் இலக்கத்திலுள்ள தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவக பொது நிர்வாகத்திற்கான சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 407 ஆம் இலக்கத்திலுள்ள தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகத்தில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் zoom தொழில்நுட்ப வழியாக விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில் zoom வழியாக தொடர்பு கொள்ளப்பட்டு சமுகமளிப்பதற்கு அல்லது நேரடியாக பங்குபெறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கான பொறுப்பை தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. மேலதிக விபரங்களுக்கு, 011-2685217 என்ற தொலைபேசி எண்ணினுடாக அல்லது **sarpgiar@kln.ac.lk** ஊடாக பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவிப் பதிவாளருடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தொல்லியல் பட்டப்பின் பட்ட நிறுவகம்,**
**இல. 407, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**
**2022 ஓகஸ்ட் 01 ஆம் திகதி.**

# பெறுகை அறிவித்தல்

## வீதி அபிவிருத்தி போக்குவரத்து மின்வலு மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

## மத்திய மாகாணம்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி போக்குவரத்து மின்வலு மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரினால் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகளிற்கு, செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கைத்தொழில் நிர்மாணத்துறை மற்றும் பண்டங்களை வழங்கல் மற்றும் அஸ்போல்ட் கொங்கிறீட் வழங்கல்களிற்காக அரச செல்லுபடியாகும் தன்மையிலுள்ள அஸ்போல்ட் உற்பத்தி செய்து விநியோகிக்கும் நபர்களிடமிருந்து மற்றும் திரவநிலை தார் இற்கான பதிவைக் கொண்டுள்ள தார் உற்பத்தி செய்து விநியோகிக்கும் நபர்களிடமிருந்து கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில்களிற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

விலைமனுத்தொகையானது, 5 மில்லியன் ரூபா அல்லது 5 இற்கு மேற்படும் கைத்தொழில்களிற்காக கம்பனிகள் சட்டம் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பெற்றிருத்தல் வேண்டும் அதன் பிரகாரம் உங்கள் நிறுவனத்தின் மூலம் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமுள்ள தரப்பினர், தம் கைத்தொழில் மற்றும் உங்கள் மின்னஞ்சல் முகவரியை பிழையின்றிக் குறிப்பிட்டு, விண்ணப்பக்கடிதமொன்றை 2022.08.23 ஆம் திகதிக்கு முன்னர் prdatender@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். "CIDA" பதிவு அல்லது அஸ்போல்ட் வழங்கல்களிற்காகச் செல்லுபடியாகும் வியாபாரப்பதிவை உறுதிப்படுத்துவதற்காகத் தேவையான ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பக்கடிதத்துடன் மின்னஞ்சலுக்கு முன்வைக்கவும்.

**விலைமனுப்படிவங்களை வழங்கும் இறுதித் திகதி 2022.08.23 என்பதுடன் ஏனைய முக்கிய தகவல்கள் பின்வருமாறு:**

1. நீங்கள் விண்ணப்பிக்கும் கைத்தொழிலுக்கான தகவல்கள், விண்ணப்பக்கடிதத்தில் பிழைகளின்றி மற்றும் தெளிவாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன் தகவல்கள் சரியாக இன்றேல், பூரணப்படுத்தப்பட்டிராவிடின் மற்றும் போதியளவு தகைமைகளைக் கொண்டிராவிடின், உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவிக்கப்பட்டு உங்கள் விண்ணப்பக்கடிதம் நிராகரிக்கப்படும்.
2. மின்னஞ்சல் மூலம் விண்ணப்பக்கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் 2022.08.23 அன்று பி.ப.12.30 இற்கு முடிவுறுவதுடன், விண்ணப்பக்கடிதங்களை முன்வைக்கும் ஒப்பந்த நிறுவனங்களிற்கு மாத்திரம் 2022.08.03 முதல் 2022.08.23 வரை அலுவலக நேரங்களில் மாத்திரம் விலைமனுதாரரின் விலைமனுப்படிவங்கள் விண்ணப்பக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு முன்வைக்கப்படும்.
3. நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, 2022.08.16 அன்று மு.ப.10.30இற்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் Zoom மூலம் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் பங்குபற்றுவதற்கான தகவல்கள் பின்வருமாறு:
   - **பரிசீலனை இலக்கம் (Meeting ID) : 7104324355**
   - **கடவுச் சொல் (Passcode) : 2022/3rd**
   - **தொடர்பு முகவரி (Join Zoom Meeting) : https://us05web.zoom.us/i/7104324355?pwd+aiRpYWVYL25FNUtZZXpOSHZJYORSdz09**
4. குறித்த விலைமனுப் படிவங்களின் மென்பிரதிகள் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு முன்வைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நீங்கள் விலைமனு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வன் பிரதிகள் 02ஐ பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். உங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள விலைமனுப்படிவங்களின் வன் பிரதிகளில் உள்ள அனைத்து பக்கங்களும் நீங்கள் சமர்ப்பிக்கும் விலைமனுக்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் தபால் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கைத்தொழிலுக்கான தொடர் இலக்கம் மற்றும் கைத்தொழிலின் பெயர் மற்றும் மூலப்பிரதியா நகல்பிரதியா எனத் தெளிவாக மற்றும் பிழையின்றிக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

   உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென தனித்தனி உறைகளில் சேர்க்கப்பட்டு, அவற்றை ஒருறையில் சேர்த்து, "தலைவர், பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து மின்வலு மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, இல.109, யட்டிநுவர வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2022.08.25 அன்று மு.ப.10.30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் சேர்ப்பதற்கு அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிற்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.
5. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக விலைமனுத்திறத்தல், வீதி அபிவிருத்தி போக்குவரத்து மின்வலு மற்றும் வலுசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, இல.109, யட்டிநுவர வீதி, கண்டியில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
6. விலைமனுப்படிவங்களை வழங்குவதற்காக மத்திய மாகாண விதி அபிவிருத்தி அதிகார சபையானது எந்தவிதக் கட்டணத்தையும் அறவிடமாட்டாது. தேவையான ஏனைய விபரங்களை, "பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இ.ல.09, எஹலேபொள குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி" இடம் அல்லது தொலைபேசி இலக்கம் 081-2052279, 081-2204378, 081-2052308 ஐ அழைத்து மற்றும் prdatender@gmail.com மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

   மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ், ஒப்பந்த நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில்களினதும் 2022 ஆம் ஆண்டில் தற்பொழுது செயல்படுத்தப்படும் செயற்றிட்டங்களினதும் முன்னேற்றம், ஒப்பந்தத்தை வழங்குகையில் கவனத்திற் கொள்ளப்படும் மேலும், நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களை வழங்கல் தொடர்பான சுற்றறிக்கைகளின் விதிமுறைகள், பெறுகை நடவடிக்கைகளின் போது பேணப்படும் அவ்வாறே, ஒப்பந்த நிறுவனமொன்றிற்கு கைத்தொழிலொன்றுக்கு மேல் வழங்குவதா என்ற தீர்மானம் பெறுகைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

   விலைமனுக்களுடன் நீங்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் பிழைகளின்றி மற்றும் விலைமனுக்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கமைவாகச் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் குறித்த தகவல்களை பிழைகளின்றி சமர்ப்பிக்காதிருத்தல் விலைமனுக்கள் நிராகரிப்பதற்கு ஏதுவாகும் மேலும் ஏதேனும் விலைமனுவொன்றை அல்லது அனைத்து விலைமனுக்களையும் காரணங்களை முன்வைக்காமல் நிராகரிக்கும் மற்றும் வழங்கலைத் தீர்மானிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகுமென்பதுடன் ஆகக்குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென்ற கடப்பாடும் கிடையாது.

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் வலுசக்தி மற்றும்**
**மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,**
**இல.109, யட்டிநுவர வீதி,**
**கண்டி.**

**தலைவர்**
**பெறுகைக்குழு**

### மாகாண வீதி அதிகார சபை

### (திறந்த) பெறுகைக் கோரல் - 2022 மூன்றாம் படிநிலை

| தொடர் இல | ஒப்பந்த இலக்கம் | விபரம் | CIDA பதிவு | மதிப்பீட்டு பெறுமானம் ரூபா மில்லியன் | விலைமனுப் பிணையம் 120 நாட்கள் செல்லுபடியாகுதல் வேண்டும் (25.08.2022 - 22.12.2022) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைமனு பிணைத் தொகை ரூபா | விலைமனுப் பிணையம் வங்கி வரைவு ரூபா |
| **பராமரிப்பு விதிகள்** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - கண்டி** | | | | | | |
| **அஸ்போல்ட் வழங்கல்** | | | | | | |
| 1 | CPC/PRDA/MAIN/K/KAN/2022/05 | ஹன்தான உடவெல வீதியில் அஸ்போல்ட் பரப்பி அபிவிருத்தி செய்வதற்காக அஸ்போல்ட் வழங்கல் (4 + 950 - 5 + 343/0 + 925 - 0 + 953 / 0 + 700 - 0 + 749 Km) | அஸ்பேல்ட் உற்பத்திக் கான அரச பதிவு | 6.80 | 34,500.00 | 69,000.00 |
| **வீதிப் பராமரிப்பு பதார்த்தங்களை வழங்கல்** | | | | | | |
| 2 | CPC/PRDA/MAIN/K/KAN/2022/06 | முருதலாவ மல்சும்மன வீதியை அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (2 + 920 - 5 + 770Km)<br>கிரிபத்கும்புர தியபலாகொட வீதியை அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (0 + 650 - 2 + 000 Km)<br>நித்தவெல வீதியை அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (0 + 153 - 0 + 362Km) | C8-C7 | 4.03 | 20,500.00 | 41,000.00 |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 3 | CPC/PRDA/MAIN/K/HAR/2022/02 | பிரேமரத்ன மாவத்தையில் மணல்கலவை தாரிட்டு மேம்படுத்தல்களிற்காக பதார்த்தங்களை வழங்கல் (1 + 100 - 3 + 300 Km) | C9-C8 | 0.92 | 5,000.00 | 10,000.00 |
| 4 | CPC/PRDA/MAIN/K/HAR/2022/03 | கஹல்ல மஹகம வீதியை அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (0 + 000 - 0 + 800 Km) | C8-C7 | 4.42 | 22,500.00 | 45,000.00 |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - குண்டசாலை** | | | | | | |
| 5 | CPC/PRDA/MAIN/K/KUN/2022/03 | மல்பான கெங்கல்ல வீதிக்கு கல்தாரிட்டு அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (0 + 000 - 0 + 920 Km) | C7-C6 | 6.92 | 35,000.00 | 70,000.00 |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - கம்பளை** | | | | | | |
| 6 | CPC/PRDA/MAIN/K/GAM/2022/06 | ஒலிகொட பிட்டவலவத்தை வீதிக்கு கல்தாரிட்டு அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (0 + 000 - 1 + 100 Km) | C7-C6 | 7.31 | 37,000.00 | 74,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - மாத்தளை** | | | | | | |
| 7 | CPC/PRDA/MAIN/M/MAT/2022/01 | உவர் முற்றத்திற்கான பதார்த்தங்களை வழங்கல் (Kiula Yard) | C8-C7 | 2.46 | 12,500.00 | 25,000.00 |
| 8 | CPC/PRDA/MAIN/M/MAT/2022/02 | ஒயிலிகந்த அங்கும்புர வீதிக்கு தாரிட்டு அபிவிருத்தி செய்வதற்காக பதார்த்தங்களை வழங்கல் (2 + 380- 3 + 330 Km) | C7-C6 | 6.24 | 31,500.00 | 63,000.00 |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - நாவுல** | | | | | | |
| 9 | CPC/PRDA/MAIN/M/NAU/2022/01 | கோங்கஹவெல புப்பிலிய ஹெலம்ப கஹவத்த வீதிக்கு முதலாம் மற்றும் இரண்டாம் தாரிட்டு அபிவிருத்தி செய்வதற்கான பதார்த்தங்களை வழங்கல் (4 + 540- 5 + 540 Km) | C7-C6 | 6.79 | 34,000.00 | 68,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - திம்புள** | | | | | | |
| 10 | CPC/PRDA/MAIN/N/DIM/2022/03 | டன்சினன் பூண்டுலோயா வீதியின் முதலாம் மற்றும் இரண்டாம் தாரிடுதல் மற்றும் கல்தாரிட்டு அபிவிருத்தி செய்வதற்கான பதார்த்தங்களை வழங்கல் (9 + 300- 10 + 300 Km) | C7-C6 | 6.83 | 34,500.00 | 69,000.00 |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - ராகல** | | | | | | |
| 11 | CPC/PRDA/MAIN/N/RAG/2022/02 | ராகல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக முற்றத்திற்கான பதார்த்தங்களை வழங்கல் | C9-C8 | 1.81 | 9,500.00 | 19,000.00 |
| 12 | CPC/PRDA/MAIN/N/RAG/2022/03 | உடபுஸ்ஸல்லாவ மடுல்ல வீதிக்கு கல் தாரிட்டு அபிவிருத்தி செய்வதற்கான பதார்த்தங்களை வழங்கல் (7 + 000- 7 + 720 Km) | C7-C6 | 5.59 | 28,000.00 | 56,000.00 |
| **நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 13 | CPC/PRDA/MAIN/N/RIK/2022/01 | ரிகில்லகஸ்கட நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக முற்றம் மற்றும் பதியபெல்ல முற்றங்களிற்கான பதார்த்தங்களை வழங்கல் | C8-C7 | 2.86 | 14,500.00 | 29,000.00 |
| 14 | CPC/PRDA/MAIN/N/RIK/2022/02 | பதியபெல்ல மத்துரட்ட ஹைபொரஸ்ட் வீதியில் மணல் தாரிடுவதற்காகப் பதார்த்தங்களை வழங்கல் (2 + 700- 10 + 000 Km) | C8-C7 | 2.03 | 10,500.00 | 21,000.00 |
| **ஏனைய செயற்றிட்டங்கள்** | | | | | | |
| **ஏனைய செயற்றிட்டங்கள்** | | | | | | |
| 15 | CPC/PRDA/OTHER/K/KAN/2022/01 | வீதி அபிவிருத்தி அமைச்சின் பின்னாலுள்ள பசுமை இல்லத்திற்கன்மையிலுள்ள குருஞ்சுவரைப் புதுப்பித்தல் | C9-C8 | 1.03 | 5,500.00 | 11,000.00 |
| **வீதிகள் மற்றும் முற்றங்களிற்காக தார் வழங்கல்** | | | | | | |
| 16 | CPC/PRDA/MAIN/TAR/2022/01 | 80/100 தார் பீப்பாய்கள் மற்றும் திரவதார் (CSS1) பீப்பாய்களை வழங்கல் | திரவ நிலை தார் வழங்கல் களிற்கான அரச பதிவு | 42.00 | 210,500.00 | 421,000.00 |

பொதுநலவாய பளுதூக்கும் போட்டியில்

# வெண்கலப் பதக்கம் வென்றார் இலங்கை வீரர் டிலங்க குமார

பேர்மிங்ஹம் பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை தனது முதல் பதக்கத்தை வெற்றிக்கொண்டது. ஆண்களுக்கான 55 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட டிலங்க குமார 235 கிலோகிராம் எடையை தூக்கி வெண்கலப்பதக்கத்தை வென்றார். இவர் ஸ்னெட்ச் முறையில் 105 கிலோகிராம் எடையையும், கிளீன் அண்ட் ஜெக் முறையில் 120 கிலோகிராம் எடையையும் தூக்கி இந்த பதக்கத்தை வென்றிருந்தார். தங்கம் வெல்லும் வாய்ப்பு இருந்தாலும் அதனை தவறவிட்டதாக டிலங்க கவலை வெளியிட்டிருந்தார்.



இதேவேளை, ஆண்களுக்கான 61 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட திலங்க பலங்கசிங்க தன்னுடைய முதல் முயற்சியில் 100 கிலோகிராம் எடையை தூக்கியிருந்ததுடன், இரண்டாவது முயற்சியில் 105 கிலோகிராம் எடையை தூக்க முற்பட்டபோது, உபாதைக்கு முகங்கொடுத்தார். இதனால், அவர் போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்.

அதேநேரம், பெண்களுக்கான 49 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட ஸ்ரீமாலி திவிசேகர மொத்தமாக 152 கிலோகிராம் எடையை தூக்கி 8வது இடத்தை பிடித்துக்கொண்டார். இவர் ஸ்னெட்ச் முறையில் 65 கிலோகிராம் எடையையும், கிளீன் அண்ட் ஜெக் முறையில் 87 கிலோகிராம் எடையையும் தூக்கியிருந்தார். ஆண்களுக்கான ஸ்குவாஷ் 32 வீரர்களுக்கான இரண்டாவது சுற்றில் இலங்கை சார்பில் போட்டியிட்ட ரவிந்து லக்சிறி மற்றும் ஷமில் வகீல் ஆகியோர் தோல்விகளை சந்தித்தனர். ஸ்கொட்லாந்து வீரர் கிரெக் லொபனை எதிர்கொண்ட ரவிந்து லக்சிறி 03 என தோல்வியடைந்த நிலையில், ஷமில் வகீல் 03 என இந்திய வீரர் சௌரவ் கோஷலிடம் தோல்வியடைந்தார்.

மகளிர் போட்டிகளை பொருத்தவரை இரண்டாவது சுற்றில் இங்கிலாந்து வீராங்கனை ஜோர்ஜியா கென்னடியை எதிர்த்தாடிய யெஹானி குருப்பு 30 என தோல்வியை சந்தித்தார். இதேவேளை, மற்றுமொரு வீராங்கனையான சந்திமா சினாலி இரண்டாவது சுற்றில் கனடா வீராங்கனையான நிக்கோல் புன்யனிடம் 30 என தோல்வியை சந்தித்தார்.

பொதுநலவாய விளையாட்டு விழா

# முதல் T20 ஆட்டத்தில் இங்கிலாந்திடம் தோற்றது இலங்கை அணி




2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டு விழாவிற்குரிய T20 கிரிக்கெட் தொடரில் தமது முதல் போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுக்களால் இங்கிலாந்திடம் தோல்வியை தழுவியிருக்கின்றது.

குழு B இல் இடம்பிடித்துள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி தமது முதல் போட்டியில் பேர்மிங்ஹம் நகரில் இங்கிலாந்துடன் மோதியது.

துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை மகளிர் அணிக்கு சிறந்த ஆரம்பம் அமையாத நிலையில் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை பறிகொடுத்த இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக நிலக்ஷி டி சில்வா 25 ஓட்டங்கள் பெற்றார்.

வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 107 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி ஆரம்பத்தில் தடுமாற்றம் காண்பித்த போதும், அலீஸ் கேப்சி இன் அபார ஆட்டத்தோடு போட்டியின் வெற்றி இலக்கினை 17.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களுடன் அடைந்தது. இங்கிலாந்து மகளிர் அணியின் துடுப்பாட்டம் சார்பில் அலீஸ் கேப்சி 45 பந்துகளுக்கு 4 பௌண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை மகளிர் அணியின் பந்துவீச்சு சார்பில் இனோகா ரணவீர 3 விக்கெட்டுக்களையும், ஓசதி ரணசிங்க 2 விக்கெட்டுக்களையும் சாய்த்த போதும் அவர்கள் இருவரினதும் பந்துவீச்சு வீணாகி இருந்தது.

**போட்டியின் சுருக்கம்**

**இலங்கை :** 106/9 (20) நிலக்ஷி டி சில்வா 25, சோபி எக்லெஸ்டோன் 25/3, இஸ்ஸி வோங் 10/2

**இங்கிலாந்து :** 109/5 (17.1) அலீஸ் கேப்சி 44, இனோகா ரணவீர 29/3, ஓசதி ரணசிங்க 20/2

OBSERVER SLT-MOBITEL 44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..........

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ..........

வாக்களித்தவர் பெயர் : ..........

முகவரி : ..........

மொபைல் இல. : ..........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 06-08-2022 இல. 19




சர்வதேச செய்திகள்

# வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாத ஈராக் வேண்டுமென கோஷம்

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் விருப்புக்கு இணங்காது சுயமாக ஆளும் தலைவரை தெரிவு செய்யுமாறு ஈராக்கில் ஆர்ப்பாட்டம் வெடித்துள்ளது. கடந்த புதன்கிழமை (27) ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் பிரதமரை தெரிவு செய்வதற்கு பாராளுமன்றத்தில் வாக்களிப்பு நடைபெ றவிருந்த சனிக்கிழமையும் (30) இடம் பெற்றது.

இத னால்,பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு வாக்களிப்பும் நிறுத்தப்பட்டது.இந்த வாக்களிப்பில்,ஈராக் முன்னாள் பிரதமர் நூரி அல்மாலிகியின் விசுவாசியான ஷியாஅல்சுதானிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகமிருந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமர் நூரிஅல்மாலிகி இரண்டு தடவைகள் பிரதமராக பதவி வகித்தவர்.இவரது ஆட்சிக்காலத்தில் அதிகம் ஊழல் நிலவியதாக மக்கள் கருதுகின்றனர். இதனால்,இவருக்கு விசுவாசமான ஷியா அல்சுதானி பிரதமர் பதிவிக்கு போட்டியிடுவதை எதிர்த்தே அங்கு ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

ஈராக்கின் முன்னணி ஷியா அரசியல் கட்சி தலைவரான முக்ததாஅல்சத்ரின் ஆதரவாளர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.இவரது கட்சி கடந்த ஒக்டோபரில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் அதிக ஆசனத்தை கைப்பற்றியிருந்தது.



எனினும்,அரசாங்கத்தை அமைப்பதற்கான பெரும்பான்மையை இவரது கட்சியிழந்திருந்தது.எனினும்,முக்ததா அல் சத்ருடைய கட்சியின் இணக்கப்பாட்டில் அரசாங்கம் அமைக்கப்பட்டது.இந்த கூட்டரசா ங் கத்திலிருந்து இவர்,விலகியதாலே சனிக்கிழமை பாராளுமன்றத்தில் புதிய பிரதமரை தெரிவு செய்வதற்கு வாக்களிப்பு இடம்பெறவிருந்தது.

பாராளுமன்றம்,இராணுவ தலைமையகம் உச்சநீதிமன்றம் மற்றும் அரசாங்கத்தின் முக்கிய இடங்களுள்ள பகுதியான பச்சை வலயத்தையும் இந்த முக்ததா அல்சத்ரின் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையகப்படுத்தியுள்ளனர்.இதுவரையில் நடந்த வன்முறையில் நூறு பொதுமக்களும் 25 படையினரும் காயமடைந்துள்ளனர்.சம்பிரதாய முறைப்படி ஈராக்கின் பிரதமர் பதவி ஷியா முஸ்லிமுக்கு செல்வது அங்கு சம்பிரதாயபூர்வமாக பின்பற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜோன் பைடனுக்கு மீண்டும் கொரோனா

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்பைடன் இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் கொரோனத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரை பரிசோதனை செய்தபோது இது உறுதி செய்யப்பட்டது. கடந்த வாரம் கொரோனாத் தொற்று உறுதியானதால்,தனிமைப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஜோன்பைடனுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.பின்னர் வீடு திரும்பிய நிலையில்,அடிக்கடி அவர் பரிசோதிக்கப்பட்டார்.

இவ்வாறு இரண்டு தடவைகள் பரிசோதிக்கப்பட்டதில் கொரோன தொற்று உறுதி செய்யப்படவில்லை.எனினும் நேற்று ஞாயிற்றுக்கிழமை,கொரோனா அறிகுறிகள் தென்பட்டதால் அவர் பரிசோதிக்கப்பட்டார்.இதன்போதே, தொற்று உறுதியானது.இதையடுத்து மீண்டும் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.இதுபற்றி தனது டுவிட்டரில் செய்தி வெளியிட்ட பைடன் இன்னும் சில தினங்களில் குணமடைந்து அலுவலகம் திரும்பவிருப்பதாக கூறியுள்ளார்.

# நேபாளத்தில் நிலநடுக்கம்

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் நேற்று பாரிய பூகம்பம் ஏற்பட்டது.தலைநகர் காத்மண்டுவுக்கு கிழக்கு, தென்கிழக்கே 147 கி.மீ. தொலைவில், திக்தெல் பகுதியில் இந்த பூகம்பம் ஏற்பட்டது. நேற்றுக்காலை 7.58 மணியளவில் இந்தக்கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டரில் 5.5 ஆக பதிவாகியுள்ளது. இதன் அதிர்வுகள் இந்தியா மற்றும் சீனாவில் உணரப்பட்டுள்ளன. இதனை தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் உறுதி செய்துள்ளது. இதனால், சில பகுதிகளில் வீடுகளிலிருந்த மக்கள் அச்சமடைந்து, பாதுகாப்பு தேடி தெருக்களுக்கு ஓடினர். எனினும் இந்த நிலநடுக்கத்தினால், ஏற்பட்ட பொருளிழப்புக்கள் உள்ளிட்ட விபரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை.

# துனீஸிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் சர்வாதிகாரத்துக்கு வித்திடுவதாக கவலை

துனீஸியாவில் சர்வாதிகார ஆட்சிக்கு வித்திடும் ஜனாதிபதி, கைஸ் ஸெய்டின் போக்குகளை ஆபிரிக்க யூனியன் பொருட்படுத்தாதிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது.

2014 இல் கொண்டுவரப்பட்ட அந்நாட்டு அரசியலமைப்புக்கு முரணாக துனீஸிய ஜனாபதி நடந்துகொள்வது, அவரது தனிப்பட்ட அதிகாரத்தை நிலைப்படுத்துவதற்காகவே என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

2021 ஜூலையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கைஸ்ஸெய்ட், படிப்படியாக அரசியலமைப்பை மீறும் வகையில் நடந்து வருகிறார். பிரதமரை பதவி நீக்கியமை, நீதியரசர்களை சிறையில் அடைத்தல் மற்றும் புதிய அரசியலமைப்பு ஒன்றை அறிமுகம் செய்வதற்கான முயற்சிகள் என்பவை அவற்றில் சிலவாகும்.

அரபுவசந்த புரட்சிக்குப்பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பை மீறிச்செயற்படும் துனீஸிய ஜனாதிபதியை ஆபிரிக்க யூனியன் கண்டுகொள்ளாதிருப்பதாக பொதுவாக விமர்சிக்கப்படுகிறது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 1ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.